# சரிந்த சாம்ராஜ்யம்

★

மா. இளஞ்செழியன் B.A. (HONS)

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத்தெரு :: சென்னை 1.

இரண்டாம் பதிப்பு. 1953

விலை
அணா 0—10—0

ப்ரீ பிரின்டர்ஸ்
அச்சகத்தில்
அச்சியற்றப்பட்டது.

# ஒரு சொல்!

"வெறும் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு, மனிதருக்கு மனிதர் வேற்றுமையைக் கற்பிக்கும் கொடுமை திராவிட நாகரிகத்துக்கு முற்றிலும் முரண்பட்டது ஆகும். திராவிடப் பண்பாட்டின் தலைவர்களாக விளங்கிய திருவள்ளுவர், அவ்வையார் போன்ற அறிஞர்கள், தாங்கள், பிரம்மாவின் முகத்திலிருந்து பிறந்த மேல்சாதிக்காரர்கள் என்று ஒருபோதும் சொல்லிக்கொண்டது கிடையாது. நம் நாயன்மார்களும் ஆழ்வார்களும் கூட வெறும் பிறப்பினாலேயே பெருமை உண்டு என்னும் தத்துவத்தை ஏற்றுக் கொண்டனரில்லை. பிறவியிலேயே உயர்வு தாழ்வு உண்டு என்னும் எண்ணத்தைக் கற்பித்தவர்களும், அந்த எண்ணம் என்னும் அடிப்படை மீது பல கொடுமைகளுக்கும் நிலைக்களமாக விளங்கும் **வர்ணாஸ்ரம தர்மம்** என்னும் கட்டிடத்தை எழுப்பியவர்களும் ஆரியர்களே ஆவார்கள். ஆரிய நாகரிகத்தால் ஏற்பட்ட இயற்கையான விளைவுதான் இந்த நாட்டில் காணப்படும் கல்வியறிவின்மை. இந்தக் கல்வியறிவின்மையை மூலப்பொருளாகக் கொண்டுதான் பிராமண இனத்தவரின் ஏகபோக ஆதிக்கம் உருவாகியிருக்கிறது."

—**திராவிடத் தந்தை தியாகராயர்**

[ 1917-ல் ஆற்றிய சொற்பொழிவு ]

# சில சொற்கள்!

மதநம்பிக்கை என்னும் உற்பத்திச் சாலையில், சூது—சூழ்ச்சி—வஞ்சகம் என்னும் எத்தர்களால், தலைவிதி தத்துவம் என்னும் உருக்கு இரும்பைக்கொண்டு தயாரிக்கப்பட்ட விசித்திரமானதோர் சுரண்டல் இயந்திரம், வர்ணாஸ்ரம தர்மம்!

பிரம்மாவின் காலில் உதித்தவர்கள் என்று சொல்லப்படும் இந்த நாட்டுப் பெருங்குடி மக்களை ஆலையில் இட்ட கரும்புபோல் கசக்கிப் பிழிந்து, அப்படிப் பிழிவதால் கிடைக்கும் கருப்பஞ் சாற்றை, பிரம்மாவின் முகத்தில் உதித்தவர்கள் என்று சொல்லப்படும் ஒரு சிறு பரம்பரையின் வாழ்க்கை வயலை வளமாக்கும் நீராகப் பாய்ச்சுவது தான் இந்த இயந்திரத்தின் வேலை.

சூது நிறைந்த இச்சுரண்டல் இயந்திரத்தை எப்படி எப்படி இயக்குதல் வேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் குறிப்புச் சுவடிதான் மனுதர்ம சாஸ்திரம். இந்த இயந்திரத்தின் அருகே இருந்து கொண்டு, இதன் சக்கரங்களுக்கு எண்ணெய் விட்டுக்கொண்டும், இதன் உறுப்புகள் ஒன்றுடன் ஒன்று ஒழுங்குபெற உருள்கின்றனவா என்பதைக் கண்காணித்துக் கொண்டும், உடைந்துபோகும் இதன் பகுதிகளை அவ்வப்போது சரி பார்த்துக்கொண்டும் இருக்கும் மேஸ்திரிமார்கள் தான் வேதங்கள்—புராணங்கள்—இதிகாசங்கள்.

இந்த இயந்திரத்தை ஓய்வு ஒழிவின்றி சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாக இயக்கிக்கொண்டிருக்கும் மின்சார சக்தியின் பெயர்தான் ஆத்மீக வாதம்.

"ஒரு சிறு கூட்டம் உழைக்காமல் உயர்வாழ்வு வாழ்வதற்காக நாட்டின் பெரும்பான்மை மக்களை இரக்கம் துளியுமின்றி கசக்கிப் பிழிந்து அவர்களை வாட்டி வதைப்பது முறையா—அறமா—நீதியா—இது தகுமா — இந்தக் கொடுமையை தினம் தினம் புரிவதற்காக ஓர் இயந்திரமா—இந்தச் சுரண்டல் இயந்திரத்தைத் தூள் தூளாய் உடைத்தெறியாமல் இருப்பவனும் ஓர் மனிதனா?" என்றெல்லாம் வீரமுழக்கம் இட்டவண்ணம், இந்த இயந்திரத்தைச் சுக்குநூறுக்குவதற்காக அறப்போர் தொடுத்த

அஞ்சாநெஞ்சர்களிற் சிலர்தான் புத்தர், திருவள்ளுவர், அவ்வை, வேமன்னு, சித்தர்கள், தியாகராயர், டாக்டர் நாயர். டாக்டர் நடேசன் ஆகியோர் ஆவர்.

இந்த இயந்திரம் எந்தக் காலத்தில் தயாரிக்கப் பட்டதோ அந்தக் காலம் முதல், இந்தக் காலம்வரை, இந்த இயந்திரத்தின் கொடுமையை எதிர்த்துப் போராட, அவ்வப்போது புரட்சி வீரர்கள் பலர், எதற்கும் துணிந்த வர்களாய் எத்தகைய ஆபத்தையும் அணைக்கும் தைரியம் படைத்தவர்களாய், 'எலிகள் புசிக்க ஏலாம் கொடுத்தே சிங்க ஏறுகள் ஏங்கிடுமோ—புலிகள், நரிக்குப் புசிப் பளித்தே ஒரு புதரினில் தூங்கிடுமோ?" என்று உரிமை முரசொலி கொட்டியவர்களாய் நம் சமுதாய வானில் ஒளி வீசித்தான் இருக்கின்றனர்.

என்ருலும், வர்ணாஸ்ரமதர்மம், இன்னமும், அதன் பலம் குன்ருமல், அதன் சுரண்டல் சக்தி சிதருமல், அதன் கொடுமையும் குரூரமும் மங்காமல், பழையபடிதான் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கிறது. இவ்வளவு பிரம் மாண்டமான பலமும் செல்வாக்கும் அந்த இயந்திரத் திற்கு ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், எந்த மக்களுடைய உரிமை வாழ்வை ஒடுக்கி—கருத்தைக் குருடாக்கி—உள் ளத்தை இருட் குகையாக்க அந்த இயந்திரம் உருவாக்கப் பட்டதோ, அந்த மக்களிலேயே பலர், இன்னமும் அந்த இயந்திரத்தை, தங்களுடைய வாழ்க்கையைப் பூஞ்சோலை யாக்க வந்த தேவதூதன் என்று தவருகக் கருதிக்கொண் டிருப்பதுதான்.

எனவே, இந்த இயந்திரத்தைத் தூள் தூளாய் உடைத்தெறிந்து இந்த இயந்திரத்தில் பன்னெடுங்கால மாகச் சிக்கிச் சிதைந்து கொண்டிருக்கும் மக்களுக்கு விடுதலை அளிக்க விரும்பும் வீரர் கூட்டம், முதலில் செய் தாகவேண்டிய பணி, இந்த இயந்திரத்தின் ஈவு இரக்க மற்ற சுரண்டல் சக்தியையும், இதனுல் ஏற்பட்டிருக்கும் எண்ணற்ற தீமைகளையும், இம் மக்களுடைய உள்ளத்தில் பதியும்படி விளக்குவதுதான்.

அந்தப் பணி புரிவதற்கான ஒரு சிறு முயற்சியே இந்தப் புத்தகம்.

**மா. இளஞ்செழியன்.**

# சரிந்த சாம்ராஜ்யம்!

## 1

"என்னப்பா நண்பா, நாடகம் எப்படி? பிடிக்கிறதா உனக்கு?"

"பிடிக்கிறதாவா, ஏதேது, கரும்பு இனிக்குமா உனக்குஎன்றுகூடக்கேட்பாய்போல் இருக்கிறது! நாடகம் A 1. ரொம்ப ஜோர்! அருமையான கதைப் போக்கு! அற்புதமான வசனங்கள்! அழகான நடிப்பு! மாலை நேரத்தில், மரினா கடற்கரையோரத்தில், ரப்பர்ரோட்டில்,ரோல்ஸ்ராய்ஸ்காரில் உல்லாசமாகப் பவனி வருவது போலிருந்தது நாடகக் காட்சிகளின் பின்னேயே என் மனம் ஓடிக்கொண்டிருந்த மாட்சி! ஆனால்......."

"ஆனால் என்று ஆயாசத்தோடு பேசுகிறாயே என்னப்பா காரணம்? இவ்வளவு ருசிகரமான நாடகத்தைத் தீட்டிய கரம் ஒரு சூனமானாவின் வகுப்புவாதக் கரமாக இருக்கிறதே தவிர நம்முடைய கட்சியின் 'நல்லதோர்' கரமாக இல்லையே என்று யோசிக்கிறாயா?"

"செச்சே! அதெல்லாம் ஒன்றுமில்லை தோழா! திறமை—அது எங்கே இருந்தாலும் மதிக்கப்படவேண்டிய மாண்புமிகு பொருள் தானே! ஓர் எழுத்தாளன் வேறொரு கட்சிக் கூடாரத்தில் உலவுகிறான் என்ற காரணத்திற்காகவே அவனுடைய எழுத்துத் திறமையை மதிக்க மறுக்கும் மட்டரகமான மனிதப் பிராணியா நான், நீ கூறுவது போல எண்ணி ஆயாசப்பட!

அதல்ல நண்பா நான் ஆனுல் என்று இழுத்தாற் போல் பேச ஆரம்பித்ததற்குரிய காரணம், நாடகம் அற்புதமானதோர் இலக்கிய சிருஷ்டி என்பதுதான் என் அழுத்தந் திருத்தமான கருத்து. ஆனுல் இந்த நாடகத்தை ஒரு வரலாற்று ஓவியம் என்று கூறுகிறுர்களே, இது உண்மை யாக இருக்குமா என்பதுதான் எனக்குள்ள ஐயப் பாடு!''

''நான் கூட நாடகத்தில், கங்கு பட்டர், மாவீரன் சிவாஜியை தன் மனம் போனபடி ஆட்டிப் படைக்கும் கட்டம் வந்த நேரத்தில், உண்மையா கவே கங்குபட்டர் என்ருேர் ஆரிய குரு அந்த நாளில் இந்த நாட்டில் உலவிக் கொண்டுதான் இருந்தாரா அல்லது அண்ணுத்துரையின் கற்பனு சக்தியின் விளைவா இந்த நாடக பாத்திரம் என்பதைப் பற் றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.''

''அதே சிந்தனைதான், எனக்கும் இப் போதும்! அகில இந்தியாவிலேயும் தன் புகழ்க் கொடியை நாட்டிய ஆற்றல் அரசன் சிவாஜி அரை ஜாண் பஞ்சாங்கத்தைக் கையில் ஏந்திய இந்த ஆரிய குருவின் தயவுக்காகக் காத்துக்கிடக்க வேண்டியிருந்ததுஎன்பதும், இந்தக் ''குருமூர்த்தி'' யின் கருணு கடாட்சம் தனக்குக் கிடைக்காவிட் டால் தன்னுடைய நாட்டிற்குத் தான் முடிசூட்டிக் கொள்ள முடியாத பரிதாப நிலையில் இருந்தான் என்பதும் நம்பக் கூடியனவாக இல்லையே! வர லாறு இப்படியுமா நண்பா இருக்கும்!''

''அதுதானே எனக்கும் புரியவில்லை! மராட் டிய மண்டலத்து மாவீரன் சிவாஜி காசிபுரத்துக் கனபாடி கங்குபட்டரின் கடைக்கண் நோக்கு தன் மீது விழாவிட்டால் தனக்குப் பட்டாபிஷேகமே

நடக்க முடியாது என்று எண்ணினுனமே! எப்படி இது உண்மையாக இருக்க முடியும் ?"

"காசிபுரத்துக்கங்குபட்டரின் கருணையைக்கோரிக் கைபிசைந்த வண்ணம் காத்துக் கிடந்தான் மாவீரன் என்று மட்டும் இல்லையே கதை, மராட்டிய தேசத்தில் மண்டிக்கிடந்த ஆரியமத மதோன்மத்தர்களின் ஆசியும் அருளும் அன்புப் பார்வையும் கிட்டவேண்டும் என்பதற்காகவும் கூட ஏங்கிக் கிடந்தானுமே ஏறுபோன்ற எழிலரசன்—அது தானே வேடிக்கையாக இருக்கிறது! சரித்திரத் துணுக்குகளாக இருக்க மாட்டா நண்பா, இவைகள் எல்லாம் அண்ணுத்துரையின் அழகு தமிழ்க் கழனியில் விளைந்த கற்பனைப் பயிர்களாகத்தான் இருக்கும்! ஆம், அப்படித்தான் நான் எண்ணுகிறேன்."

"ஆமாம், ஆமாம், நானும் கூட அதுபோலத் தான் நினைக்கிறேன். உண்மையும் கூட அப்படித்தான் இருக்கும். மன்னுதி மன்னர்களின் மணி மகுடங்களையெல்லாம் தன் காலடியிலே உருண்டோடச் செய்த உத்தம வீரன் தன் தலையிலே ஒரு 'முடி'யை ஏற்றிக் கொள்வதற்காக வெறும் புல்லாயுதமின்றி வேருயுதம் ஏதும் ஏந்தியறியாத வீணர்களின் தாளிலே வீழ்ந்து பணிந்தான் என்பது ஒருபோதும் உண்மையாக இருக்காது; நிச்சயமாக இருக்காது. எனக்கு நன்ருகப் புரிகிறது, நீ கூறியதைப் போல தங்கள் கட்சிப் பிரசாரத்திற்காகத் தோழர் அண்ணுத்துரை கட்டிக்கொண்ட கற்பனைக் கோட்டைதான் இந்த நாடகம்! எவ்வளவுதான் சிந்தித்துப் பார்த்தாலும், நீ கூறிய அந்த முடி.வைத் தவிர வேறு எந்த முடிவுக்கும் நானும் வர முடியவில்லை."

"நீயும் நானும் மட்டுமா, வேறு யாராக இருந்தால் தானென்ன, வேறு முடிவுக்கு எப்படி வந்து விட முடியும்? சீறிப் போரிடும் குணம் படைத்த சிங்க ஏறு சிறு நரிகளின் தாள் பணியும் அளவுக்குச் சிறுமை அடைய முடியுமா? அப்படியும் ஒரு வரலாறு இருக்கிறது என்று கூறினால் யார் தானப்பா அதை ஒப்புக்கொள்ள முடியும்?"

* * * * *

அறிஞர் அண்ணாத்துரை அவர்களின் அழகிய ஆராய்ச்சிச் சித்திரமாகிய "சந்திர மோகன்" நாடகம், தமிழகத்தின் பல பகுதிகளிலும் நடித்துக் காட்டப்பட்ட பல சந்தர்ப்பங்களில், நாடகம் முடிந்து, மக்கள் வீட்டிற்குச் செல்லும் வேளையில், நாடகம் பார்க்க வந்திருந்த வேற்றுக் கட்சித் தோழர்கள், குறிப்பாக தேசீயத் தமிழர்கள் மேலே குறிப்பிட்டுள்ள "உரையாடல் பாணி"யில் பேசிக்கொண்டு செல்லும் காட்சியைத் தன்மான இயக்கத் தோழர்களாகிய நாம் பலமுறை கண்டிருக்கிறோம்.

அப்போதெல்லாம், நமக்கு, உண்மை வரலாற்று நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டிருக்கும் நம் நாடகத்தைப் பற்றி இவர்கள் இதுபோன்ற கருத்துரையை வழங்குகிறார்களே என்பதை முன்னிட்டுக் கோபம் பிறப்பதில்லை. மாறாக, அவர்களுடைய உரையாடல், நம்முடைய உள்ளத்தில் ஆநந்த கீதத்தைத்தான் உலவவிடுவது வழக்கம்.

உண்மையிலேயே, அவர்களால் சிவாஜியைப் போன்ற மாவீரன் ஒருவன் மத மதோன்மத்தர்களின் தாள் பணிந்தால்தான் முடி சூடிட முடியும் எனத்தகும் முகாரி நிலையிலே இருந்திருப்பான் என்பதை-நம்ப முடியவில்லை.

வேழங்களையும் வீழ்த்தும் அளவு வீரம் படைத்த வேங்கை குள்ளநரிக் கூட்டத்தின் முன் கூனிக்குறுகிக் கும்பிட்டுக் கிடந்தது என்பதை, அவர்களுடைய பகுத்தறிவு, உண்மை என்று ஒப்புக் கொள்ள மறுக்கிறது.

ஆரியமாயை, அடலேறு சிவாஜியைப் போன்ற அஞ்சா நெஞ்சர்களையும் ஆட்டிப்படைக்கும் ஆற்றல் படைத்ததாயிருக்கிறது என்பதை அவர்களுடைய உள்ளம் நிச்சயமாக நம்ப மறுக்கிறது.

இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்காது—நடக்க முடியாது—நடப்பது இயற்கை விதிக்கு மாறுபட்டது—நடந்ததாக யாரேனும் கூறினால் அதை நம்ப முடியாது—நம்புவது கூடாது என்றெல்லாம் தான் அவர்கள் எண்ணுகிறார்கள்.

கனபாடி கங்குபட்டரின் காலடியிலே தன் தலைதாழ்த்திப் பணிந்தால்தான், தான் மண்டலாதிபதியாக முடியும் என்று வீரன் சிவாஜி கருதியதாக வரலாறு தெரிவிக்கிறது என்று நாம் கூறினால், அதை அவர்கள் நம்பவே மறுக்கிறார்கள் என்றால், அது, அந்தச் சேதியை நம்பக்கூட முடியாத அளவுக்கு அவர்களுடைய உள்ளத்திலே ஆரிய எதிர்ப்பு உணர்ச்சி வளர்ந்திருக்கிறது என்பதைத்தான் நமக்கு நன்கெடுத்துக் காட்டுகிறது. ஆகவேதான், அவர்களுடைய உரையாடல் நமக்கு மன எரிச்சலைத் தரவில்லை, மாறாக இன்ப உணர்ச்சியையே ஊட்டிடும் தன்மையதாய் இருந்தது என்று குறிப்பிட்டோம்.

வாள் ஏந்திய வீரன் சிவாஜியை தங்கள் தாள் ஏந்தும் நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டார்கள் ஆரிய கங்குபட்டரும் அவர் இனத்தவரும் என்ற

உண்மையை நாடகம் பார்க்கவந்த காங்கிரஸ் திராவிடர்கள் நம்ப மறுக்கிறார்கள் என்பது இருக்கட்டும் ஒரு புறம், அறிஞர் அண்ணாத்துரை, இந்த நிகழ்ச்சியை விளக்கும் வரலாற்று ஏடுகளைக் கண்டறிந்ததற்கு முன்னால், இப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது என்று அவரிடம் சென்று யாராவது கூறியிருந்தால், அவரே கூட நம்பியிருக்க மாட்டார் இந்த சம்பவத்தை.

சம்பவம், உண்மையிலேயே, யாராலும் நம்ப முடியாதது தான், ஆனால் நடந்திராதது அல்ல!

இந்த விசித்திர உலகிலே நம்ப முடியாத எத்தனையோ சம்பவங்கள் நடந்தபடி இருக்கின்றன. அவற்றிலே ஒன்றுதான், ஆற்றல் வீரன் சிவாஜி ஆரிய இனத்தவர்க்கு அடிபணிய நேரிட்ட நிகழ்ச்சி.

"சந்திரமோகன்" நாடகம் வெறும் கற்பனையின் விளைவு அல்ல—வரலாற்றுச் சுவடியிலிருந்து கிழித்தெடுக்கப் பட்ட ஓர் ஏடு.

கங்குபட்டரும், நாடகத்திற்காக சிருஷ்டிக்கப்பட்ட ஒரு கதாபாத்திரம் அல்ல—நம்மைப் போலவே, ஒரு காலத்தில், இந்த உலகத்தில் நடமாடிய மனிதர்!

**ஜதுநாத் சர்க்கார்** என்பவர் "சிவாஜி" என்றோர் புத்தகம் தீட்டியிருக்கிறார். அதிலே மிக அருமையான முறையிலே தரப்பட்டிருக்கிறது ஆரியவஞ்சகம், அடலேறு சிவாஜியை தன் அடிபணியச் செய்தது எப்படி என்பதற்கான அற்புதமான தகவல். அப்படி ஒன்றும் **ஜதுநாத் சர்க்கார்** திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளராக இருப்பவர் அல்ல, ஏதோ ஆரியபுரியினர்மீது அவருக்கு இயல்பாக இருக்கக்கூடிய ஆத்திரத்

தின் காரணமாகத்தான் இப்படியெல்லாம் எழுதி ஞர் என்று கூறி அவருடைய கருத்துரையை ஒதுக்கித் தள்ளிட! அவர், ஒரு சிறந்த வரலாற் ருசிரியர். வீரன் சிவாஜியின் வாழ்க்கையை பல் வேறு சரித்திர ஆதாரங்களைக் கொண்டு துருவித் துருவி ஆராய்ந்து பார்த்திருக்கிருர் ஜதுநாத் சர்க் கார். அந்த ஆராய்ச்சியின் விளைவுதான் 'சிவாஜி' என்னும் பெயரில் வெளிவந்திருக்கும் அவருடைய சரித்திர ஏடு—கற்பனைச் சித்திரமல்ல!

சிவாஜி யார் என்று கேட்டால் சற்றும் தயக்கமின்றி சிறு பிள்ளைகளும் விடை கூறுவர், அவன் அஞ்சாமையின் அடையாளச் சின்னம், ஆற்றலின் திருவுரு, வீரத்திற்கோர் எடுத்துக் காட்டு, மராட்டிய மண்டலத்தை மாநிலத்தில் உரு வாக்கிய மாபெரும் தலைவன் என்று! ஆம்! சிவாஜி, அத்தகைய வீர புருஷனுகத்தான் திகழ்ந் தான் அவன் வாழ்ந்த காலத்தில்! வீரம் என்ருல் எப்படியிருக்கும் என்பதற்கோர் நடமாடும் அடை யாளமாக இருந்தான்! சிவாஜி என்னும் பெயரைக் கேட்டாலே மராட்டிய வீரர்கள் உள்ளத்தில் தேனுறு பாயும்—தென்றல் வீசும். சிவாஜி தங்களூர் கோட்டையருகே வருகிருன் என்று அறிந்தால், மராட்டிய மக்கள் மன்றத்தில் ஆநந் தம் அரசோச்சும்! களிப்பு, கூத்தாடும்! சிவாஜி யைப் பார்ப்பதை, சிவாஜியுடன் பேசுவதை, சிவாஜியின் தலைமையில் போராடுவதை, சிவாஜி யின் பட்டாளத்தில் தங்கள் பெயரைப் பொறித் துக்கொள்வதைப் பெறற்கரிய பேருகக் கருதினர் மராட்டிய மண்டலத்தவர்கள். சிவாஜியின் கட் டளை பிறந்தால் அனலையும் விழுங்கத் தயாராக இருந்தனர். அவனுடைய ஆணை கிடைத்தால், எத்தகைய கடும் செயலையும் நிறைவேற்றத் தயார் தயார் என்று தைரியத்தால் துள்ளிக் குதித்தனர்.

சிவாஜி என்னும் பெயர் அவர்களுக்கு ஒரு ஜீவ சக்தியாக, அவர்களுடைய உள்ளத்தைத் தட்டி யெழுப்பும் உயரிய கீதமாக, அவர்களை உரிமைப் போர்ப்படையின் ஈட்டிமுனைகளாக மாற்றி அமைத்து மறுகோலம் செய்யத்தக்க ஆற்றல் வாய்ந்த ஓர் அற்புத மந்திரமாக இருந்தது.

சிவாஜி—மராட்டிய மக்களுக்கு ஒரு மன மோகன கீதம்! ஆனால் மாற்றாருக்கோ மனதை நடுங்கவைக்கும் மாபெரும் புயல்! சிவாஜி போர் போர் என்று போர் முழக்கம் புரியத் தொடங்கி விட்டான் என்றால், பூரிப்பு, மராட்டிய வீரர்களின் மனதிலே தவழும், ஆனால் அச்சம் அந்நியர்தம் உள்ளத்தை ஆட்டிப்படைக்கும். சிவாஜி சீறிப் போரிடும் சிங்கமென மராட்டிய மண்டலத்தில் உலவிக் கொண்டிருந்த நேரத்தில் இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலேயும் சிவாஜியின் பெயர் எதிரொலித்தது. எங்கும், எங்கெங்கும், அவனுடைய புகழ் ஒளி வீசிடலாயிற்று. யாரும், யார் யாரும், அவனுடைய வீரதீர பராக்கிரமச் செயல்களைப் புகழ்ந்து பேசுவதைத் தமது நித்திய கடன்களிலே ஒன்றாகக் கொண்டிடலாயினர்.

பதினாறு வயது பாலகனாக இருந்த நேரத்தி லேயே, சிவாஜி, தோர்ணா என்னும் கோட்டை யைத் திடீர் தாக்குதல் மூலம் கைப்பற்றி, அங்கு தன் வெற்றிக்கொடியை நாட்டினான். பிறகோ, புரந்தர், ரெய்காட், ஜாவ்ளி, கல்யாண், பன்கலா, தண்டராஜபுரி என்று வரிசை வரிசையாகப் பலப் பல கோட்டைகள் அவனுடைய வீரத்தின் காலடி யிலே வந்து வீழ்ந்தன. திக்கெட்டும் அவனுடைய சூறாவளிப் படைகள் திடீர்தாக்குதல் நடத்தி தட தடவென வெற்றி மாளிகைக்குள் நுழைந்து கொண்டிருந்தன. பீஜபூர் சுல்தானும் டில்லி

பாதுஷாவும் ஏவிய பிரம்மாண்டமான பட்டாளங்கள் சிவாஜியின் சிறு படை வரிசையின் முன் எதிர்த்து நிற்கமுடியாமல் பலமுறை தோற்றோடிப் போயிருக்கின்றன.

பரம்பரை பரம்பரையாக அரசாண்ட அனுபவம் பெற்ற குடும்பத்திலே உதித்தவனல்லன் சிவாஜி. தலைமுறை தலைமுறையாக உழவுத் தொழிலையன்றி வேறு தொழிலைப் புரிந்தறியாத விவசாயக் குடியிலே பிறந்தவன். ஆம்! சிவாஜி ஒரு விவசாயி; ஆனால் அந்த விவசாயிதான் எத்தனையோ பரம்பரை வீராதி வீரர்களையும் விநாடி நேரத்தில் வீழ்த்தியிருக்கிறான்.

பீஜப்பூர் மன்னனின் தயவால் தன் தந்தையாருக்குக் கிடைத்த ஒரு சிறு ஜமீன்நிலத்தில் தன் வாழ்க்கை வரலாற்றைத் தொடங்கிய சிவாஜி சில பல ஆண்டுகளுக்குள்ளாக ஒரு பரந்த சாம்ராஜ்யத்தையே உருவாக்கி விட்டான். சிதறிக்கிடந்த மராட்டிய மாணிக்கங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து, மராட்டிய இனம் மண்ணிலே மாப்புகழுடன் திகழும் வகை செய்தான். வயது சிவாஜிக்கு 34 ஆனபோது, அவனுடைய ஆற்றலும் ஆண்மையும் வீரமும் தீரமும் அதுவரை அவனுடைய காலடியில் கொண்டுவந்து குவித்திருந்த ஜில்லாக்கள் ஏராளம். ஒரு பெரிய நிலப்பரப்பு அவனுடைய ஆட்சியின் கீழ் வந்துவிட்டது.

இதுவரையிலே மராட்டிய மக்களின் முடிசூடா மன்னனாக ஜொலித்த சிவாஜி, இப்போது மணிமுடி தரித்து, பட்டாபிஷேகம் நிகழ்த்தி, மன்னன் என்ற தோரணையில் மண்டலமாள எண்ணினான்.

"இதென்ன பிரமாதமான காரியம்! அரசர் பலரை வீழ்த்தி, படைகள் பலவற்றைப் பறிகொ

ணம் செய்து, பரந்த சாம்ராஜ்யத்தை உருவாக்கிய சிவாஜிக்குப் பட்டாபிஷேகம் செய்துகொள்ளத்தானு தெரியாது! இது ஒரு பெரிய, சிரமமான, காரியமா'' என்றுதான் எவருக்கும் கூறத் தோன்றும்.

உண்மையிலேயே பட்டாபிஷேகம் செய்து கொள்வதற்குத் தேவையான சகல வசதிகளும் சிவாஜிக்கு சம்பூர்ணமான முறையிலே அமைந்து கிடக்கத்தான் செய்தன.

ஆட்சி புரிவதற்கோ நாடு இருக்கிறது—அவன் உருவாக்கிய நாடு! பொக்கிஷத்திலோ பொருள் ஏராளமாக இருக்கிறது—அவன் தேடித்திரட்டிய பொருள்! செல்வாக்கோ அவனுக்கு அமோகம்—அவன் சுண்டுவிரலை அசைத்தால், அந்த அசைப்பின் போக்கிற்கேற்ப மராட்டிய மண்டலமே உடன் அசையும். பட்டாளங்களோ பலப்பல இருந்தன—எத்தகைய பேராபத்திற்கும் தயாராக இருக்கக்கூடிய துள்ளுகாளைகள் நிறைந்த பட்டாளங்கள்.

கோட்டை கொத்தளங்கள், காட்டரண்—மலை அரண்—நதி அரண்—மதில் அரண்கள், அருந்திறல் அமைச்சர்கள், உற்றநல் தோழர்கள்—எதிலும் குறைவில்லை சிவாஜிக்கு.

ஒரு பட்டாபிஷேகத்திற்கு என்னென்ன தேவையோ அவ்வளவும் குறைவற இருந்தன சிவாஜிக்கு—என்றாலும் அவனல் பட்டாபிஷேகம் செய்துகொள்ள முடியவில்லை.

ஏன்? என்ன காரணம்? சகல வசதிகளும் நிரம்பியிருக்கும்போது பட்டாபிஷேகம் தடைபடுவது எதனல்?

சரித்திர ஆசிரியர் ஜதுநாத் சர்க்கார் இதோ பேசுகிறார், கேளுங்கள் :—

"சிவாஜியின் பட்டாபிஷேகத்திற்கு ஒரு விசித்திரமான தடை இருந்தது. பண்டைக்கால சாஸ்திரங்களின்படி க்ஷத்திரிய வம்சத்தைச் சேர்ந்த ஒருவன்தான் முறைப்படி மன்னனாக முடிசூட்டிக் கொள்ளமுடியும். சிவாஜியின் பரம்பரை க்ஷத்திரிய வம்சத்தையோ அல்லது வேறு எந்த துவிஜ (இரு பிறப்பு உயர்) சாதியையோ சேர்ந்தது அல்ல என்பதும், நிலத்தை உழுது பயிரிட்டு வாழும் விவசாயக் குடும்பமே அது என்பதும் நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இத்தகைய ஒரு சூத்திர ஜாதியில் பிறந்த ஒரு தான்தோன்றி மனிதன் ஒரு க்ஷத்திரிய புருஷனுக்கே உரிய உரிமைகளையும் பெருமைகளையும் அடைவதென்பது எங்ஙனம் முடியும்?"

மகுடாபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்யத் தொடங்கிய மாபெரும் தலைவன் சிவாஜியைப் பார்த்து மராட்டிய மண்டலத்து முப்புரிதாரிகள் இதுபோன்ற ஆணவக் குரலை எழுப்பினராம்—கூறுவது யாரோ சூனுமானு அல்ல—ஜதுநாத் சர்க்கார்—வரலாற்றுப் பேராசிரியர்.

கேளுங்கள் தோழர்களே, வெட்கக்கேட்டைக் கேளுங்கள். சிவாஜிக்கு முடிசூடிக் கொள்ள உரிமையில்லையாம்—ஏனெனில் அவர் ஓர் சூத்திரராம்! இருபிறப்பினருக்கு மட்டும்தான் இத்தகு உரிமைகளும் பெருமைகளும் அடைவதற்குத் தகுதியும் சிறப்பும் உண்டாம்—ஒரு சாதாரண சூத்திரனுக்கு மன்னனாகும் பிறப்புரிமை கிடையாதாம்! உள்ளத்திலே எவ்வளவு தைரியம் இருந்திருந்தால், ஆரிய மாயையை முறித்துத் தள்ளிவிட்டுப் பட்

டாபிஷேகம் நடத்திக்கொள்ளும் தைரியமும் துணிவும் மதப்பற்று மிக்க சிவாஜிக்கு ஏற்படாது என்னும் உறுதியிலே எவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை இருந்திருந்தால், மராட்டிய மண்டலத்தில் உலவிய ஆரியக் கூட்டம் இதுபோல தைரியமாக, துணிச்சலாக, வெளிப்படையாக, அழுத்தந் திருத்தமாக, சிவாஜிக்கு அரசாளும் உரிமை கிடையாது என்று முழக்கமிட்டிருப்பார்கள்!

ஆற்றலற்றவன் அரசாளக்கூடாது என்ருல் அதிலே அர்த்தம் உண்டு. படைபலம் இல்லாதவன் பாராளக்கூடாது என்ருல் அதிலே நியாயம் உண்டு. மக்களின் தோழமையும் பாசமும் பெருதவன் மகுடதாரியாகக் கூடாது என்ருல், அது ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய வாதம். ஆட்சித் திறமையும் அனுபவ அறிவும் அற்றவன் தார்வேந்தன் ஆதல் தகாது என்ருல், ஆம் தகாதுதான் என்று கூறலாம். ஆனல் மராட்டிய சிங்கத்திற்கு மகுடாபிஷேக உரிமை கிடையாது என்று முணுமுணுத்த முப்புரிதாரிகள் இத்தகு வாதங்கள் எதையும் கிளப்பினரில்லை, அவர்கள் சொன்னதெல்லாம் சிவாஜி உழவர் குலத்திலே பிறந்தவன், வேளாண் தொழிலினன், சூத்திரன், ஆகவே அவனுக்கு வேந்தனுகும் சிறப்புரிமை கிடையாது என்பதுதான். எவ்வளவு ஆணவம் மிகுந்த ஆரிய வாதம்! எத்தகைய விபரீதம் கலந்த விசித்திரப் போக்கு!!

சிவாஜி வீரன்தான், தீரன்தான், மகாசூரன்தான், மராட்டிய மண்டலம் பெற்றெடுத்த மகத்தான தலைவன்தான், அஞ்சாத நெஞ்சமும் அயராத உழைப்பும் படைத்த அடலேறுதான், களம் பல சென்று போர் பல நடத்தி புகழையும் புது வாழ்வையும் மராட்டிய மண்டலத்திற்குக்கொண்டு

வந்து சேர்த்த சீர்மிகு பண்பினன்தான், முகிலைக் கிழித்துக்கொண்டு வெளிக் கிளம்பும் முழுமதி போல இருண்டுகிடந்த மராட்டிய வாழ்க்கையில் ஒளி வீசச்செய்த திருவிளக்குத்தான். ஆம், ஆம்—இவ்வளவும் உண்மைதான் — ஆனால் உண்மை இந்த அளவோடு நின்றுவிடவில்லையே—மேலும் கொஞ்சம் இருக்கிறதே உண்மை—அவன் சூத்திர ஜாதியிலே அல்லவா பிறந்துவிட்டான், என் செய்வது, எப்படி அவன் மன்னனாவது, சாஸ்திரம் எப்படி இந்த விபரீதத்தைச் சம்மதிக்கும்,—முடியாது, கூடாது, அவன் மன்னன் ஆவது தகாது, தவறு, சாஸ்திர விரோதம், தேவநிந்தனை—மீறி, முடிசூடிக் கொள்ளுவானானால் கேடு பல நிகழும், நாடு சுடுகாடாகும், தேவாதி தேவர்கள் மராட்டிய உலகு மண்மேடாகட்டும் எனச் சபித்திடுவர்—ஒப்பமாட்டோம் இந்தக் கொடுமையை—சூத்திரனுக்கு அரசா? இருபிறப்பாளர்மட்டுமே பெறக்கூடிய பெருவாழ்வை ஒரு பிறப்பாளன், சூத்திரன், இழிமகன் பெறுவதா, விடுவோமா இந்தக் கேடு நிகழ—பார்த்துக் கொண்டிருப்போமா இந்தப் பாழும் காட்சியை! பிராமணர் அல்லது க்ஷத்திரியர் மட்டுமே இராஜ்யாதிகாரம் புரியலாம் என்று புனித ஏடுகளின் மூலம் மகேஸ்வரன் வரையறை செய்திருக்க, ஆண்டவனின் அந்தக் கட்டளையை மீறிட ஒரு சிவாஜி துணிவதா, தகுமா, நீதியா, முறையா, என்றெல்லாம் மராட்டிய ஆரியர்கள், மக்கள் மன்றத்திலே சூது மிகு வாதங்களைக் கிளப்பி, மராட்டிய முன்னணியிலே பிளவை, பேதத்தை உண்டுபண்ணப் பெருமுயற்சி புரிந்தனர்.

திடுக்கிட்டுப் போனான் சிவாஜி! பட்டாபிஷேகமோ நிற்கக்கூடாது—சாஸ்திர விரோதமாகச் சென்றான் சிவாஜி என்னும் பழிமொழியும்

தன்னை அண்டக்கூடாது, என்செய்வது என்று எண்ணமிடலானான். மத மாயையை வீசி மக்கள் முன்னணியை முப்புரிமார்பினர் குலைப்பதைப் பார்த்தான். இந்த சாஸ்திரம் ஏந்திகளின் சொல் வழி சென்றாலொழிய, மக்கள், மதவெறி காரண மாக, மதவிரோதச் செயல் புரிந்தான் சிவாஜி என்று கருதிக்கொண்டு தன்மீதே பாய்ந்திடவும் கூடும் என்பதை எண்ணினான். மக்களை ஆட்டிப் படைக்கும் மதமெனும் மந்திரக்கோல் ஆரியகூடா ரத்தவர் கரத்திலே இருப்பதால், அவர்களுடைய தயவை, தான், பெற்றாலொழிய தான் முடி சூடுவது இயலாது என்பதை உணர்ந்தான். எனவே அவர்களை அழைத்தான். அவர்கட்குப் பெருமதிப்புக் கொடுத்தான்.

ஒன்றும் தெரியாததுபோல அவர்கள் கேட் டனர்:—மஹாராஜ்! எங்களை அழைத்ீர்களாமே, என்ன காரணம்?

சிவாஜி சொன்னான்:—சாஸ்திர சிரோன் மணிகளே, தங்கள் சித்தம் என் பாக்கியம். உங்க ளால் ஒரு முக்கியமான காரியம் ஆகவேண்டும். உங்களால்தான் அது ஆகும்.

அவர்கள்:—என்ன அது மஹாராஜ்?

சிவாஜி,—தெரியாதா உங்களுக்கு? நான் நாடு பல வென்றிருக்கிறேன், கோட்டைகள் பல வற்றைக் கைப்பற்றி யிருக்கிறேன். பிரதேசங்கள் பல நம்முடைய ஆட்சியின்கீழ் வந்திருக்கின்றன. நான் ஆள்கிறேன் அவற்றை—ஆனால் இன்னும் நான் அரசனாகவில்லை. முடிசூட்டுவிழா நடக்க வேண்டும்.

"யாருக்கு பிரபோ? உங்களுக்கா?"

"ஆமாம்! எனக்குத்தான்! வேறு யாருக்கு?"

"மன்னிக்க வேண்டும் பிரபோ, மன்னனுகும் உரிமை துவிஜ குலத்தவர்க்கு மட்டும்தானே உண்டு என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. தாங்கள்........."

"நான் சூத்திரன்தான்—தெரியும் எனக்கு! சூத்திரனுக்குப் பட்டாபிஷேக உரிமை இல்லை என்று இந்து சாஸ்திரங்கள் கூறுகின்றன—அதுவும் தெரியும் எனக்கு! தெரிந்தும்தான் கூறுகிறேன். நான் பட்டாபிஷேகம் புரிந்து கொள்ளத்தான் வேண்டும்."

"அது சாஸ்திர விரோதமாச்சே மகராஜ்! அதனுல் நாட்டிற்கு நாசம் சம்பவிக்குமே, தெய்வ குற்றம் வந்து சேருமே, மராட்டியம் பாழாகுமே, வேண்டாம் மகராஜ் இந்த எண்ணம்!"

"அவசரப் படாதீர்கள்! சகலகலா சாஸ்திரிகளே, அவசரப் படாதீர்கள்! நான் மன்னனுக வேண்டும். அதே நேரத்தில் சாஸ்திர விரோதமாகவும் நான் நடக்கக் கூடாது."

"அது எப்படி மகராஜ் முடியும்?"

"முடியும், வழி இருக்கிறது. நான் க்ஷத்திரியனுக மாற வேண்டும். ஆம், என்னை க்ஷத்திரியனுக மாற்றவேண்டும் நீங்கள். வேத முறைப்படி சாஸ்திர முறைப்படி என்னை ஒரு க்ஷத்திரியன் என்று உலகெலாம் ஒப்புக் கொள்ளும் வகையில் நீங்கள் காரியமாற்ற வேண்டும். என்ன சொல்கிறீர்கள்?"

"சொல்வதென்ன பிரபோ, செய்யலாம் தங்கள் சித்தப்படி, ஆனுல்........."

"ஆனுல் என்ன, செலவு அதிகம் ஆகும் என்று பார்க்கிறீர்களா, என்ன செலவானுலும் நான் ஏற்கத் தயார்."

"செலவு அதிகமாகும் என்பது மட்டுமல்ல! நீங்கள் குறிப்பிடும் காரியத்தைச் சித்தி பெறச் செய்வதே எங்களால் முடியாது. வடதேசத்தில் காசிமா நகரில், கங்கு பட்டர் என்னும் குருதேவ் வீற்றிருக்கிறார். அவர் வந்தால்தான் இந்தக் காரியத்தை முடிக்க முடியும்."

"அதற்கென்ன, அப்படியே செய்வோம்."

சிவாஜி, உடனே, கங்கு பட்டரை வரவழைப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்கிறான். பிறகு என்ன ஆயிற்று என்கிறீர்களா? இதோ, மீண்டும், வரலாற்றாசிரியர் ஜதுநாத் சர்க்கார் பேசுகிறார், கேளுங்கள்:—

> "இந்தியா முழுவதுமுள்ள பிராமணர்கள், சிவாஜி ஒரு க்ஷத்திரியர் என்று அதிகார பூர்வமாக நிரூபிக்கப் பட்டால்தான், அவனுடைய பட்டாபிஷேகத்திற்கு விஜயம் செய்து, தங்களுடைய மேலான ஆசிர்வாதத்தை சிவாஜிக்கு வழங்குவர். [அப்படி அவர்களுடைய ஆசீர்வாதம் கிடைத்தால்தான் பட்டாபிஷேகம் சாஸ்திரோக்தமானதாகும்.]
>
> "எனவே, எவர் ஒரு பிராமணோத்தமர் சொன்னால் இந்தியா முழுவதுமுள்ள பிராமணர்கள் ஆம்—சரி என்று மறுபேச்சின்றி ஒப்புக் கொள்வார்களோ, அப்படிப்பட்ட ஒருவரின் தயவை சிவாஜி நாட வேண்டியதாயிற்று.
>
> "காசிமாநகரில் வாழ்ந்து வந்த கங்குபட்டர் சிவாஜியின் காலத்தில், கலியுக பிரம்ம தேவர் என்றும், தற்கால வியாச பகவான் என்றும் வெகுவாகப் பாராட்டப் பட்டவர்; நான்கு வேதங்களிலும் ஆறு தத்துவங்களிலும் எல்லா சாஸ்திரங்களிலும் நிபுணத்துவம் உடையவர்

என்று கருதப்பட்டவர்; அந்தக்காலத்து சமஸ்கிருத பண்டிதர்களிலேயும் கிரந்த கர்த்தாக்களிலேயும் மிகப்பெரிய ஞானி என்று போற்றப்பட்டவர். ஆகவே அவர் ஒருவரால்தான் தன் எண்ணத்தை ஈடேற்ற முடியும் என்று சிவாஜி கருதினார்.

"முதலில் வர மறுத்தபோதிலும், கங்குபட்டர், பிறகு மராட்டிய மண்டலத்திற்கு வரவும், சிவாஜி ஒரு க்ஷத்திரியரே என்று பிரகடனப்படுத்தவும் ஒப்புக்கொண்டார்.

"ஏராளமான நிதியை சன்மானமாகப் பெற்றுக்கொண்டு, காசியில் இருந்தபடியே, கங்குபட்டர், ஸ்ரீஇராமச்சந்திர மூர்த்தியின் நேர் பரம்பரையில் உதித்த உதய்பூர் மகாராஜாவின் வம்சத்திலே வந்த பரிசுத்த க்ஷத்திரியர் சிவாஜி என்று ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்.

"பிறகு, சிவாஜிக்குப் பட்டாபிஷேகம் நடத்திவைப்பதற்காக, கங்குபட்டர், சிவாஜியின் வேண்டுகோளுக்கிணங்க, மராட்டிய மண்டலத்திற்கு விஜயம் செய்யலானார்.

"அப்போது, சிவாஜியும் அவருடைய மந்திரி பிரதானி பரிவாரங்களும், தலைநகரிலிருந்து பல மைல் தூரம் முன்கூட்டியே சென்று, கங்குபட்டரை வழியிலே வரவேற்று உபசரித்து அழைத்துக்கொண்டு வந்தார்கள்.

"கங்குபட்டருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு, பாராளும் தார்வேந்தர் ஒருவருக்கு அளிக்கப்படுவதைப்போல அவ்வளவு சிறப்பாக இருந்தது."

இருக்காதா, சிறப்பாக! கங்குபட்டரின் கருணை கடாட்சத்தால்தானே சூத்திர சிவாஜி க்ஷத்திரிய சிவாஜியாக மாறிப் பிறக்க முடிந்தது! எனவே வர வேற்பு பிரம்மானந்தமாகத்தானே இருந்திருக்கும்! இயற்கையாக எதிர்பார்க்கக்கூடியதுதானே!

## 2

மராட்டிய ஆரியர்கள், சிவாஜி, முடி சூடிட விழைந்தவுடனே, சூத்திரனாவது—பட்டம் சூடிடுவதாவது! விட்டோமா பார்—பிடி சாபம் என்றார்கள். ஆனால், சிவாஜியை க்ஷத்திரியனாக்குவதன் மூலம், தங்கள் இனத்திற்கு சிவாஜியைவிட மேலான தகுதியும் பெருமையும் கிடைக்கிறது என்று தெரிந்தவுடனே, 'சத்திரபதி சிவாஜி மஹாராஜாவுக்கு—ஜே' என்று ஜெயஜெய கோஷம் எழுப்பத் தொடங்கிவிட்டனர்.

தங்கள் குல தலைவர் கங்குபட்டர் மராட்டியத்தலை நகருக்குள் மாவீரன் சிவாஜியால் மகோன்னதமான வரவேற்புகளுடன் அழைத்துவரப்பட்ட அற்புதமான காட்சியின் மாட்சியைக் கண்டபோது, அவர்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலேயும், குதூகலம், குதித்துக் குதித்துக் கூத்தாடத் தொடங்கிவிட்டது. அவர்கள் கண்களிலே, களிப்பு ஒளி! அவர்கள் முகத்திலே ஆனந்தத்தின் திருநடனம்! அவர்களுடைய கன்னங்களிலே ஒரு பூரிப்பு! அவர்களுடைய பேச்சிலே ஒரு புதுமுறுக்கு! அவர்களுடைய நடையிலேகூட ஒரு புதுவித ஜோர்! சுருக்கமாகச் சொல்வதானால் அந்த முப்புரிதாரிகள் ஒவ்வொருவரும் ஓர் ஆனந்த சித்திரமாகவே உருமாறிவிட்டனர்! அவர்கள்தம் மனம் எனும் வீணையில் மகிழ்ச்சி எனும் மாதரசி மனமோகன கீதம் வாசிக்கத் தொடங்கிவிட்டாள் — சந்தோ

ஷம், அந்த சாஸ்திரம் தாங்கிகளின் சொந்த சொத்தாகிவிட்டது.

உண்மையிலேயே அந்தக் கனபாடிகளின் கூட்டம், அவர்களுடைய வாழ்நாளிலேயே அது வரை கண்டறியாத ஓர் ஆநந்தத்தை, கங்குபட்டர் மராட்டிய பிரவேசம் புரிந்த நாளிலே காணலாயினர். அவர்கள் அதுவரை ஒருநாளும் அனுபவித்தறியாத பூரிப்பை, புது மகிழ்வை, கம்பீர உணர்ச்சியை எமக்கு ஈடு யாருண்டு என்ற சிந்தனையை அன்று அனுபவிக்கலாயினர். "கண்டறியாதன கண்டோம்—இதுவரை ஒருநாளும் கொண்டறியாத உணர்ச்சிகள் கொண்டோம்!" என்பதே அவர்களுடைய அன்றைய கீதமாகிவிட்டது. 'கணபதி வயிற்றை'த் தாங்கிக்கொண்டு மிக மிக சிரமத்துடன் ஆடி அசைந்து செல்வதையே நடைப்பழக்கமாக தலைமுறை தலைமுறையாகக் கொண்டிருந்த அவர்கள், அன்று, சற்று நிமிர்ந்த நோக்குடனும் கம்பீரத் தோற்றத்துடனும்கூட நடக்க முயன்றனர் — அவ்வளவு மகிழ்ச்சி அவர்களுக்கு கங்குபட்டரின் ஆரிய பவனியைக் கண்டு!

சிவாஜி கங்குபட்டருக்கு அளித்த ராஜோபசார வரவேற்பை, "யாரோ ஒரு கங்குபட்டருக்குத் தானே மராட்டியத் தலைவன் வரவேற்பளிக்கிறான் —நமக்கென்ன — நம்மையா அவன் பல்லக்கிலேற்றி பவனிவரச் செய்கிறான் — இல்லையே— பிறகு, நாம் ஏன் பூரிப்படைய வேண்டும்" என்ற விதத்திலே அலட்சியபாவத்துடன் கவனிக்கவில்லை அந்தப் பஞ்சாங்கப் பட்டாளம்! கங்குபட்டருக்குக்கிடைத்த மரியாதையை தங்களுக்கே கிடைத்த மரியாதையாகத்தான் அவர்கள் கருதினர். வீரன்

சிவாஜி காசிபுரம் கங்குபட்டரின் தாளில் வீழ்ந்து பணிந்த ஒவ்வொரு சமயமும், தங்கள் காலிலே அந்தக் கட்டழகன் வீழ்ந்து வணங்குவதாகவே அவர்கள் எண்ணிப் பூரித்திடலாயினர். கங்குபட்டர் கண் அசைப்பால் இட்ட கட்டளைகளை, சிவாஜியும் அவன் ஆணைப்படி அவன் பரிவாரங்களும் ஓடிஓடி நிறைவேற்றும் காட்சியைக் காண நேரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவர்கள், தங்கள் கண் அசைப்பைக் கண்டே சிவாஜியும் அவன் தோழர்களும் பணியாற்றுகின்றனர் என்றெண்ணி மகிழ்ந்திடலாயினர்.

கங்குபட்டர் பெறுகிற சிறப்பு — அடைகிற மரியாதை — அனுபவிக்கிற மதிப்பு—கையாளும் செல்வாக்கு — பிரயோகிக்கும் அதிகாரம் யாவும், தங்களுக்காக தங்கள் இனத்துக்காக, ஆரிய குலத்தவர் மேன்மைக்காக, வர்ணாஸ்ரம வல்லரசின் பிரதிநிதியாக இருக்கிறார் கங்குபட்டர் என்ற காரணத்திற்காக, அவர் காலடியில் வந்து குவிகின்றன, ஆகவே, அந்த மரியாதைகளும் வரவேற்புகளும் அவருக்கு அளிக்கப்பட்ட சொந்த மரியாதைகள் அல்ல—பிரம்ம குலத்தின் ஏகபோக ஆதிக்கத்திற்கு அளிக்கப்பட்ட காணிக்கைப் பொருள்கள் என்பதாகவே மராட்டிய மண்டலத்து முப்புரிதாரிகளால் கருதப்பட்டது.

உண்மையும் அதுதானே! அவர் ஆரிய குலதலைவர்—ஆகவே அவர் பேச்சுக்கு மறுபேச்சுப் பேசுவார், பூசுரர் கூட்டத்தில் யாருமில்லை—அவர், ஆரிய தலைவர் என்ற முறையில் மனம் வைத்தால் 'சூத்திரன், ஆகவே பட்டம் சூடிக்கொள்ள அருகதை அற்றவன்' என்ற நிலையிலே இருக்கும் தன்னை க்ஷத்திரியனாக பிரகடனம் செய்துவிட முடியும்—அந்த ஆற்றல் அவருக்குத்தான் உண்டு

என்பதாக சிவாஜி கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கை காரணமாகத்தானே அவன் இவ்வளவு பிரம்மாண்டமான வரவேற்புகளையும் பேரானந்தமான மரியாதைகளையும் கங்குபட்டர் என்ற சிறிய உருவத்திற்கு அபிஷேகம் செய்யத் தொடங்கினன்! ஆகவே, கங்குபட்டருக்கு முன்னால் குவிக்கப்பட்ட மலர்மாலையிலும் புகழ்மாலையிலும் 'பக்தி' மாலையிலும் 'சாஷ்டாங்க நமஸ்கார' மாலைக் குவியலிலும் தங்கட்கும் பங்குண்டு—தங்களின் சார்பிலேயே, தங்கள் இனத்தின் சார்பிலேயே கங்குபட்டர் இந்த மரியாதைகளை ஏற்கிறார் என்று மராட்டிய ஆரியர்கள் எண்ணமிட்டதிலே தவறென்ன இருக்கிறது?

"நீ ஓர் சூத்திரனப்பா—சூத்திரனுக்கு முடிசூடும் உரிமை கிடையாதப்பா—வீணாக ஏனோ நீ அலைகிறாயப்பா—வேண்டாமப்பா, வீண் முயற்சி, விட்டுவிடப்பா"—என்பதாக, மராட்டிய நாட்டுப் பிராம்மணீயம் சிவாஜியைப் பார்த்து மிரட்டிய நேரத்தில், "யாரையா நீர் என்னைத் தட்டிப் பேச! எங்கிருந்து வந்தீர் நீர் சூத்திரன் என்றென்னை ஏச! மராட்டிய மண்டலம் நான் கட்டிய கோட்டை, அதை நான் ஆள்வதே சரியான ராஜ பாட்டை, உமக்கென்ன உரிமை இதற்குக்கூற ஓட்டை" என்று மடக்கிப் பேச முடியவில்லையே சிவாஜியால்! என்னுடைய உழைப்பால் உருவாகிய உன்னத மாளிகையை நாளுமல் வேறு யார் ஆள்வது என்று கேட்க முடியவில்லையே! கழனியை உழுது பயிரிடும் உரிமை படைத்த நான் அறுவடையை அனுபவிக்கமட்டும் தகுதியற்றவன் என்று எந்த சாஸ்திரம் கூறுகிறது—கொண்டுவா அதனை, நெருப்பிட்டுக் கொளுத்துகிறேன் என்று கூற முடியவில்லையே! அப்படிக் கூறினல் மக்கள் கோபம் தன்மீது பாயும் என்று அஞ்சினனே

சிவாஜி! அவன், பிராமணீயத்தின் உறுமலைக் கண்டபிறகு, கூறியதெல்லாம், கூற முடிந்ததெல்லாம், என் சூத்திரப் பிறவி பட்டாபிஷேகத்திற்குத் தடையாக இருக்குமானால், என்னை க்ஷத்திரியனாக அருள் கூர்ந்து மாற்றிவிட மாட்டீர்களா என்ற குழைவு மொழி தானே தவிர, சூத்திரன் ஆனால் என்ன, யாரானால்தான் என்ன, அரசை அமைத்தவன் தானே அரசை ஆள்வதும் நியாயம் என்ற புறநானூறு அல்லவே! வீரன் சிவாஜி, தன்னைச் சூத்திர நிலையிலிருந்து க்ஷத்திரிய நிலைக்கு உயர்த்த வேண்டும் என்று விப்பிரர்களை நோக்கி விண்ணப்பித்துக்கொண்ட அந்த விநாடியிலேயே, சூத்திரனுக்கு நாடாள உரிமை இல்லை—துவிஜ குலத்தவர்க்கு (பூணூல் அணியும் உரிமை படைத்தவர்களுக்கு) மட்டும்தான் அந்த உரிமை உண்டு என்ற ஒரு குலத்துக்கொரு நீதி கூறும் மனுதர்ம சாஸ்திரத்தை — வர்ணாஸ்ரம தத்துவத்தை — மேல்கீழ் ஜாதி முறையை—பிறவி உயர்வு தாழ்வை —பிராமணீயத்தின் அசைக்க முடியாத செல்வாக்கை அப்படியே ஒப்புக்கொண்டான்—ஒப்புக்கொண்டு தீரவேண்டிய நிலையில் இருந்தான் என்றுதானே பொருள்!

சிவாஜியின் வியர்வைக் கடலிடையே பிறந்த முத்தை சிவாஜியே அணிய வேண்டுமானாலும், ஆரியகுல தலைவர் கங்குபட்டரின் "அருள்" சிவாஜிக்குக் கிடைத்தால்தான் அது முடியும் என்று ஒரு நிலை இருந்து, அந்த நிலையை ஆற்றல் அரசன்—அடலேறு சிவாஜியும் மீற முடியாமல் இருந்து கங்குபட்டரை வரவழைத்து வணக்கமும் காணிக்கையும் செலுத்தினான் என்றால், வர்ணாஸ்ரம தத்துவத்திற்கு—பிரம்மகுல உயர்வுக்கு, செல்வாக்குக்கு இதைவிட அருமைபானதோர் வெற்றி வேறென்ன கிடைக்க முடியும்? பிரம்ம

குலம் உயர்ந்ததுதான்—ஏனைய குலங்கள் இழிந்தனதான் என்ற பாழும் பிரிவினைத் தத்துவத்தின் மீது பொறிக்கப்பட்ட முத்திரை போதிரம் எனத் தகும் தன்மையதல்லவா இந் நிகழ்ச்சி! எனவே தான், மராட்டிய ஆரியர் மனம், கங்குபட்டரின் "விமரிசையான விஜயம்" கண்டு இவ்வளவு பூரிப்பும் பெருமிதமும் கொண்டிடலாற்று.

திக்கெட்டும் புகழ்படைத்த திட நெஞ்சு படைத்தவனே யானாலும், வர்ணாஸ்ரம முறைக்கு முன்னால் சிவாஜி சிரம் குனிந்தே யாகவேண்டிய இந்த நிலை, எப்போதோ நினைப்புக் கெட்டாத காலத்திலே இருந்ததல்ல—சரியாக 276 ஆண்டு கட்கு முன்னர் இருந்ததுதான்—ஏன்! இப்போதும்கூட இருப்பதுதான்!—எத்தனையோ வீராதி வீரர்கள், பட்டமும் புகழும் அகில உலகப் பெயரும் வாய்ந்தவர்கள் பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரியைக் குலுக்கியவர்கள், பேரறிவு படைத்தவர்கள், பொதுவுடமை பேசுபவர்கள், என்பவர்களெல்லாம்கூட, இன்றைக்கும், "என்ன இருந்தாலும் ஐயர்வாள் வந்து புரோகிதம் செய்து ஆசிர்வதிக்காவிட்டால் நம்ம குடும்பத்துக் கல்யாணம் சோபிக்காது சார்-நமக்கு ஏதுக்கு சார் பிராமணத் துவேஷம்" என்று சொல்லத்தானே செய்கிறார்கள் வெட்கமின்றி! அந்தப் "புரட்சி வாசகங்கள்" (நம் காதிலேயும் வந்து விழத்தானே செய்கின்றன தயக்க மில்லாமல்! விஞ்ஞான ஒளியும் பகுத்தறிவு இயக்கமும் பரவியுள்ள இந்த நாளில் இந்த நிலை என்றால், 276 ஆண்டுகட்கு முன்னால், இராமாயணமும் மகா பாரதமுமே விஞ்ஞானப் புத்தகமாகவும் வரலாற்றுச் சுவடியாகவும் இருந்த காலத்தில், வர்ணாஸ்ரமக் கொடி வான் முட்டப் பறந்ததில் வியப்பேது? விசித்திரம்தான் ஏது?

கங்குபட்டர் மராட்டியபுரிக்கு விஜயம் செய்ததும் உடனடியாக சூத்திர சிவாஜியை க்ஷத்திரிய சிவாஜியாகப் புனருத்தாரணம் செய்யும் "புனிதப் பணி"யைத் தொடங்கினரில்லை. அவ்வளவு விரைவில் தொடங்கிவிடுவாரா ஆண்டவன் மட்டுமே செய்யக்கூடியது என்று கருதப்படும் அந்த அற்புதப் பணியை? முதலில், கங்குபட்டர், இந்தியா எங்கணுமுள்ள பிரம்ம குலத்துக் கலைஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் மராட்டிய மண்டலத்திற்கு வந்து சிவாஜியையும் அவருக்கு நடக்கவிருக்கும் பட்டாபிஷேகத்தையும் ஆசீர்வதித் தருளும்படியாக, சிவாஜி அழைப்பிதழ் விடுக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தார். கட்டளை உடனே நிறைவேற்றப்பட்டது. அதன் விளைவாக இந்திய கண்டம் எங்கணும் உள்ள் பிரம்ம குல கலா வாணர்களும் சாஸ்திர நிபுணர்களும் மராட்டியபுரி நோக்கி பட்டாளம் பட்டாளமாகப் பயணம் செய்யலாயினர். சில நாட்களுக்குள்ளாக, மராட்டிய மண்டலத்தில் ஆரியர் சேனை வெள்ளம்போல் திரண்டு குழுமிவிட்டது.

இந்த நிகழ்ச்சியைப்பற்றி எழுதும்போது, வரலாற்றாசிரியர் ஜதுநாத் சர்க்கார்,

> 'இந்தியாவின் ஒவ்வொரு பகுதியில் உள்ள படித்த பிராமணர்களுக்கும் அழைப்புத் தாள்கள் அனுப்பப்பட்டன. ஏனைய பிராமணர்கள் அழைப்பின்றியேகூட வந்து குவியலாயினர். 11 000 பிராமணர்கள்-அவர்களுடைய பெண்டு பிள்ளை குடும்பத்தோடு சேர்த்து—50,000 பேர், பட்டாபிஷேகம் நடக்கவேண்டிய ரெய்கார் என்னும் இடத்திற்கு வந்து சேர்ந்தனர், அவர்கள் அனைவருக்கும் நான்கு மாத காலம், தித்திப்புப் பலகாரங்களுடன் சுவையான உணவு பரி

மாறப்பட்டது. அவர்கட்குத் தேவையான சகல வசதிகளையும் சம்பூர்ணமான முறையில் குறை எதுவுமின்றி அமைத்துத் தருவதில் சிவாஜியினுடைய நுண்ணறிவும் அமைப்பு முறைத் திறமையும் பெரிதும் பயன்பட்டன"

என்று புள்ளி விவரங்களுடன், தெளிவாகவே, குறிப்பிட்டிருக்கிறார்.

50,000 பிராமணர்கள்! அவர்கள் அனைவருக்கும் 4 மாத காலம் உணவு! அதுவும் சாதாரண உணவல்ல! தித்திப்பு வகைகள் விதவிதமாகக் கொண்ட முறையில் அதுவும் சிவாஜியின் நுண்ணறிவு சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கும் ஏற்பாடுகளின்படி பரிமாறப்பட்ட உணவு! கேட்கவேண்டுமா, பிறகு அவர்களின் கொண்டாட்டத்திற்கு!

விதைக்காமல் அறுக்காமல், வெட்டாமல் குத்தாமல், ஓடி ஆடி உழைக்காமல், பாடுபட்டுப் பரிதவிக்காமல், உட்கார்ந்த இடத்தில் உட்கார்ந்தபடி—உண்ட களைப்பால் உடலில் தோன்றும் வியர்வைத் துளி தவிர வேறு களைப்பால் ஒரு சொட்டு வியர்வை சிந்தவேண்டிய அவசியம் இல்லாமல்—உல்லாச வாழ்வு, அறுசுவை உணவுடன், என்றால், யாருக்குத்தான் இனிக்காது! அதிலும் பிராமண குலத்தவர்க்குக் கேட்கவேண்டுமா! பிராமணு போஜனப் பிரியா என்ற பழமொழியே இருக்கிறதே!

ஓர் ஆளுக்கு ஒரு நாளைக்குச் செலவாகும் தொகை ஒரு ரூபா என்று கணக்குப் போட்டுப் பார்த்தால்கூட, இந்த 50,000 பூசுரர்க்கும் நான்கு மாத காலம் உணவு படைக்க குறைந்தது 60 லட்சம் ரூபா செலவாகியிருக்கும். உணவுக்கு மட்டும் செல

வாரும் தொகை இது! அவர்களுக்குத் தங்கும் இடம் தயாரித்தல், குளிப்பது முதலான வசதிகள் செய்தல், தூங்கவும் இருக்கவும் தேவையான தட்டு முட்டு பெட்டி படுக்கை பாய்தலையணை இன்ன பிற பொருள்கள் தருதல் முதலான "கடமைகள்" வேறு இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் நிச்சயமாக மேலும் பல இலட்சங்கள் செலவாகியிருக்கக் கூடும்!

அடே அப்பா! ஒரு சிவாஜியின் பட்டாபிஷேகத்தால் இவ்வளவு மகத்தான இலாபமா 'அந்த ஒரு" கூட்டத்திற்கு என்று ஆச்சரியக் கடலில் மூழ்குகிறீர்களா! ஆச்சரியப்படாதீர்கள் நண்பர்களே, இதற்குள்ளாக ஆச்சரியப் படாதீர்கள்! மேலும் மேலும் நீங்கள் ஆச்சரியப்படவேண்டிய பல அற்புதமான சேதிகள் இனி அடுக்கடுக்காக வர இருக்கின்றன இந்தச் 'சிறு சேதி'க்கே இப்படி நீங்கள் ஒரேயடியாக வியப்படையத் தொடங்கிவிட்டால், பிறகு அந்தப் பல சேதிகளை நீங்கள் எப்படித்தான் கேட்டுணர்வது? ஆமாம்; தயவு செய்து, சிறிது நேரம், ஆச்சரியப்படாமல் கேளுங்கள் ஆரியபுரியினர் அன்று பெற்ற கொள்ளை இலாபக் குவியலை!

1674-ம் ஆண்டு மே மாதம் 28-ம் நாள், கங்கு பட்டர், ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில், பரிசுத்த சடங்கை நடத்திவைத்தாராம்!—சிவாஜியும், அவருடைய முன்னோர்களும் இதுவரை சூத்திரர்களாக இருந்ததால் அவர்களுடைய ஆத்மாவின் மீது படிந்துள்ள அழுக்குகளை அகற்றுவதற்காகச் செய்யப்பட்ட சடங்காம் இது! சரித்திராசிரியர் தெரிவிக்கிறார் சிவாஜி இந்தச் சடங்கின்போது, தானும், தன் முன்னோர்களும் இதுவரை க்ஷத்திரிய புருஷர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கட

மைகளையும் தர்மங்களையும் மேற்கொள்ளாமல் இருந்த மாபாவத்திற்காகப் பிராயச்சித்தம் செய்து கொண்டாராம். பிறகு, கங்குபட்டர், பல வேத மந்திரங்களைக் கூறி, சிவாஜியைப் பரிசுத்தப் படுத்தி, க்ஷத்திரிய குலத்தவர்க்குரிய பூணூலை அணிவித்து, சிவாஜி! இனி நீ பட்டாபிஷேகம் செய்துகொள்ள சாஸ்திரப்படி ஒருவித தடையு மில்லை என்று உபதேச காண்டம் வாசித்தருளினாராம். இந்தவிதமாக க்ஷத்திரிய குலத்தவரின் பிறப் புரிமையும் உயர்ஜாதிச் சின்னமுமாகிய முப்புரி நூல் சிவாஜியின் மார்பிலே தவழும்படி செய்யப் பட்டதாம். இவையும் இவற்றின் தொடர்பான இன்னமும் பல ருசிகரமான தகவல்களும் அறிஞர் ஜதுநாத் சர்க்கார் தீட்டியுள்ள சிவாஜி என்ற சரித்திர ஏட்டிலே நிரம்பிக் கிடக்கின்றன—குறிப்பாக பக்கங்கள் 267 முதல் 282 வரையுள்ள பகுதியில் இந்த நிகழ்ச்சிச் சித்திரம் அழகுபட வரையப்பட்டுள்ளது—நாம் கூறுவதை ஐயுறுவோர் நேரில் படித்துத் தெரிந்துகொள்ளலாம், தடையேது மில்லை! புத்தகம், எல்லா நூல்நிலையங்களிலும் கிடைக்கும்!!

இந்தப் பரிசுத்த சடங்கும், இதைத் தொடர்ந்தாற் போல் நடந்தேறிய பூணூல் அணிவிப்பு விழாவும் நிகழ்ந்தான பிறகு, பிராமண குலத்தவர்க்கு ஏராளமான தொகை சன்மானமாக வழங்கப்பட்டது. கங்கு பட்டருக்கு மட்டும், இந்த இரு சடங்குகளை நடத்தி வைத்தருளிய "மஹா சேவை"க்கென்று காணிக்கையாகத் தரப்பட்ட தொகை ரூ 35 000. இந்த இரு சடங்குகளின்போதும் தங்கள் மேலான வருகையைத் தந்து "பெரிய மனது வைத்து," ஆசீர்வாதம் புரிந்த பெருங் கருணைத் திருப்பணிக்காக ஏனைய பிராமண சகோதரர்கட்குத் தரப்பட்ட நன்கொடை ரூபா 85,000, ஆக

மொத்தம் இந்த சடங்குகளின்போதுமட்டும் பிராமண குலத்த வர்க்குக் கிடைத்த இலாபம், ரூபா ஒரு இலட்சத்து இருபதாயிரம்!

இவ்வளவுதானு அவர்களுக்குக் கிடைத்த இலாபம்? இல்லை, இன்னமும் உண்டு!

"பரிசுத்த சடங்கு'க்கு மறுநாள், தன் வாழ் நாளில் தெரிந்தோ தெரியாமலோ, தான் செய் திருக்கக் கூடிய பாவங்களை யெல்லாம் போக்கிக் கொள்வதற்காக சிவாஜி சில பிராயச்சித்த சடங்கு களை மேற்கொண்டான். இந்தச் சடங்குகள் முடிந் ததும், — நன்ருகக் கவனித்துப் படியுங்கள்— 5 இலட்சம் ரூபாய், பிராமண குலத்தவர்க்குத் தானம் வழங்கப்பட்டது.

அவர்கள் பெற்ற இலாபம் இந்த அளவோடு கூட நிற்கவில்லை—மேலும் வளர்கிறது—பாருங் கள், இதோ பட்டியலை!

தங்கம், வெள்ளி, செம்பு, துத்தநாகம், தகரம், ஈயம், இரும்பு.

இந்த ஏழு உலோகங்களும், தனித்தனியே, சிவாஜியின் எடையளவு நிறுக்கப்பட்டு, அவ்வள வும் பிராமணர்களுக்குத் தானமாகக் கொடுக்கப் பட்டது.

இது முடிந்ததும்,

மெல்லிய சரிகை

கற்பூரம்

உப்பு

பாக்கு வெட்டிக் கருவிகள்

தேங்காய்

பலவகையான வாசனைத் திரவியங்கள்

வெண்ணெய்

வெல்லம்

பலவித பழங்கள்

எத்தனையோ வகையான தின்பண்டங்கள்

வெற்றிலை பாக்கு

மது

ஆகிய இவ்வளவு பொருள்களும், இன்னும் பலவிதமான பண்டங்களும் விலைபொருள்களும், தனித்தனியே சிவாஜியை வைத்து, எடைக்கு எடை, நிறுத்தெடுக்கப்பட்டு, பிராமணர்களுக்கு, சிவாஜி இதுவரை செய்த பாவங்களுக்குக் கழுவாய் தேடும் முறையில், ஏராளமாக வழங்கப்பட்டன.

இவ்வளவோடாவது நின்றதா, பூசுரர் உலகுக்குக் கிடைத்த "அதிர்ஷ்டம்!" இல்லை தோழர்களே, இன்னமும் ஏராளமாக இருக்கிறது அவர்களுக்கு சிவாஜி தன் பாவமூட்டைகளை உதறித் தள்ளுவதற்காக, அள்ளிக்கொடுத்த பொக்கிஷத்தின் கணக்குப் பட்டியல்!

முடிசூட்டு விழாவுக்கு முந்திய நாள், சிவாஜி, கங்கையாற்றிலிருந்து கொண்டுவரப்பட்ட "புண்ணிய தீர்த்தத்"தில் நீராடிவிட்டு, கங்குபட்டரை அழைத்து மறுநாள் நடைபெற விருக்கும் மகத்தான விழாவை முன்னிட்டு ரூ. 25,000 அவருக்குக் காணிக்கையாகக் கொடுத்தான். ஏனைய முக்கிய பிராமணோத்தமர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி நூறு தங்க நாணயங்கள் தானமளித்தான். அடுத்த நாள் நடைபெற விருக்கும் விழா எத்தகைய விக்கினமும் இன்றி நடைபெற வேண்டும்

என்பதற்காக சிவாஜி இத் தொகைகளை வழங்கலானான்.

6-6-1674-ம் நாளன்று பட்டாபிஷேகம் நடைபெற்றது. கங்குபட்டர் முடிசூட்டு விழாவை முன்னின்று நடத்திவைத்தார் அன்றைய தினம், சிவாஜி, அதிகாலையில் எழுந்து, குளித்து முழுகி, எண்ணற்ற சடங்குகளை ஒன்றன்பின் ஒன்றாக நடத்தி வைத்து, இறுதியில், கங்குபட்டர் காலிலும், மகுடாபிஷேகத்திற்கு வந்திருந்த ஏனைய முக்கிய பிராமணோத்தமர்கள் காலிலும் வீழ்ந்து வணங்கினான். பிறகு, முடிசூட்டும் சடங்கினை கங்குபட்டர் தொடங்கினார். பிராமணர்கட்கு இந்த முக்கிய நிகழ்ச்சியின்போது—பொன்னும் பொருளும் ஆபரணங்களும் விதவிதமான ஆடைகளும் ஏராளமாக வழங்கப்பட்டன. கங்குபட்டருக்கும் இந்த நேரத்தில் கிடைத்த சன்மானங்களும் பட்டு பீதாம்பரங்களும் அமோகம்!

முடி, சிவாஜியின் தலைமீது, கங்குபட்டரால் எடுத்து வைக்கப்பட்டு, சிவாஜி சத்திரபதியானார் (மன்னரானார்) என்று வாழ்த்துரை வழங்கப்பட்டதும், அதுவரை வேதகோஷம் முழங்கிக் கொண்டிருந்த பிராமணர்கள், சிவாஜியின் அருகே நெருங்கி வந்து நின்று, தங்கள் கரங்களை அவன் தலைமீது உயர்த்தி, அவனை ஆசீர்வதிக்கலாயினர். இந்த "ஆசீர்வாதம்" காரணமாக மீண்டும் ஒரு முறை சிவாஜி, அந்தப் பிராமணர்களுக்குப் பல வகை தானங்களும் புரியலானான்.

பட்டம் சூட்டுவிழா முடிந்த மறுநாள் வேறு, பிராமணர்கட்குத் தானம் வழங்கப்பட்டது.

"அடா அடா! சிவாஜியின் முடிசூட்டுவிழா, ஆரிய குலத்தவர்க்குச் சரியானதோர் பணம் காய்க்கும் பழுமரமாக ஆகிவிட்டது போலிருக்

கிறதே—இவ்வளவு பெரும் பொருளா, இவர்களுக்குக் கிடைத்தது—ஆச்சரியம், ஆச்சரியம்! என்று தான், இந்தக் கட்டுரையைப் படிக்கும் எவரும் கூறுவர். பிராமண குலத்தவரை பணம் எனும் கடலிலேயே நீந்தித் திளைக்க வைத்துவிட்டானே சிவாஜீ-அவர்களைப் பணத்தாலேயே அபிஷேகம் செய்துவிட்டானே என்று சொல்லிச் சொல்லி வியப்படையாமல் இருக்க முடியாது யாரும்.

ஆனால் இவ்வளவு பணமலையை வேதியகுலத்தவர்க்கு வாரி வழங்கினானே சிவாஜி, திருப்தி இருந்ததா அவர்களுக்கு? அதுதான் இல்லை!

"என்ன! திருப்தி இல்லையா? அள்ள அள்ளக் குறையாத பெரு நிதியைத் தானம் தருவதுபோல அல்லவா சிவாஜி ஏராளமாகவும் தாராளமாகவும் பொருளைக் கணக்கு வழக்கின்றி அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கிறான். இவ்வளவையும் கூசாமல் பெற்றுக்கொண்ட பிறகுமா திருப்தி பிறக்கவில்லை அந்தத் திருப்பிரம்மங்களுக்கு" என்றுகூறி திடுக்கிட்டு விடாதீர்கள். கொஞ்சம் அமைதியாக இருங்கள், இதோ ஆசிரியர் ஜதுநாத் சர்க்கார் வருகிறார், பேசுகிறார், கேட்போம்.

> " இவ்வளவு தானமும் அவர்களுடைய பேராசையைத் தீர்ப்பதாக இல்லை. இந்தத் தானங்களை யெல்லாம் பெற்றுக் கொண்டான பிறகு, சகல கலா சாஸ்திரிகளான இரண்டு பிராமணர்கள், சிவாஜியைப் பார்த்து, சிவாஜி பல கோட்டைகளின் மீது படையெடுத்துச் சென்று போரிட்ட காலத்திலெல்லாம், அந்தப் போர்களின் காரணமாகப பிராமணர்கள், பசுக்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோர் பலர் கொல்லப் பட்டிருக்கின்றனர் என்றும், அந்தக் கொலைகளின் காரணமாக சிவாஜியைச் சூழ்ந்தி

ருக்கும் பாவம் இன்னமும் கழுவப் படாமலே யிருக்கிறது என்றும், இதற்கு ஒரு பிராயச் சித்தம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்றும் எடுத்துக் காட்டினார்கள். இந்தப் பாவமன்னிப்புச் சீட்டை விற்பதற்கு அவர்கள் கேட்ட விலை ரூபாய் 8000 தான்! ஏற்கெனவே ஏராளமான அளவுக்கு நிதியை அவர்கட்கு வாரி வழங்கிய சிவாஜி, கேவலம், இந்தச் சிறு தொகையையா மறுக்கப் போகிறார்—இதையும் உடனே கொடுத்துவிட்டார்!''

வேதிய புரியினரின் இந்த சில்லுண்டித்தனத்தைக் காண வரலாற்றாசிரியர் ஜதுநாத் சர்க்காருக்கே கூட, கோபம் தாளமுடியவில்லை போலிருக்கிறது, ஆகவே தான் இதுபோல ஆத்திரம் தொனிக்கிறது அவருடைய குரலிலே, அவர் இந்த நிகழ்ச்சியைக் கூறும்போது!

இந்த நிகழ்ச்சி ஓவியத்தைத் தீட்டிவிட்டு, பிறகு, சற்று காரசாரமான முறையிலேயே, ஜதுநாத் சர்க்கார், "சூரத்தையும் கரிஞ்சியாவையும், சிவாஜி, சூறையாடிய நேரத்தில், அந்தப் படையெடுப்புகளின் காரணமாக, அங்கெல்லாம், அநியாயமாக மாண்டுபோன நிரபராதிகளின் குடும்பத்திற்குப் பண உதவி செய்தால், அவர்கள் மரணத்திற்குக் காரணமாக இருந்த பாவம் தீராதோ, இந்தச் சில பிராமணர்களின் பணப் பெட்டியை நிரப்பினால்தான் பாவம் போகுமோ, என்ன வேடிக்கையப்பா இது!'' என்று எழுதியிருக்கிறார். ஒரு வரலாற்று ஆசிரியர் என்ற முறையிலே நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தரும் பணி மட்டும் புரிய முன்வந்த அவருக்கே இந்த நிகழ்ச்சியை நினைக்கும்போது இவ்வளவு வெறுப்பும் கொதிப்பும் கோபமும் கிண்டலும் தோன்று

கின்றன என்றால் சமுதாய சீர்திருத்தப் பணி புரி வதையே வாழ்க்கைப் பணியாகக் கொண்ட நமக்கு எவ்வளவு வெறுப்பை ஊட்டும் இந்த விபரீத சம்ப வம்—அதை வார்த்தைகளால் வேறு விவரிக்க வும் வேண்டுமா?

> "பட்டாபிஷேகத்தின் காரணமாக ஏற்பட்ட ஏராளமான செலவால், சிவாஜியின் கஜானா காலியாகிவிட்டது. துருப்புக்களுக்குச் சம்ப ளம் கொடுப்பதற்குக்கூட, முடிசூட்டு விழா வுக்குப் பிறகு, சிவாஜியிடம் பணம் இல்லை. எனவே, விழா முடிந்ததும் முடியாததுமாக சிவாஜி, இதுவரை கைப்பற்றப்படாத இடங் களின் மீது படையெடுத்துச் சென்று பொன் னும் பொருளும் கைப்பற்றியாக வேண்டிய அவ சியம் ஏற்பட்டுவிட்டது. சிவாஜியும் புறப்பட்டு விட்டார் போர்க்களம் நோக்கி!"

—"சிவாஜி"யின் வரலாற்றுச் சுவடியில், பட் டாபிஷேகம் என்ற அத்தியாயத்திற்கு அடுத்த அத்தியாயம் இப்படித்தான் ஆரம்பமாகிறது. அது வேறெப்படி ஆரம்பமாக முடியும்? பட்டா பிஷேகம், பிராமண குலத்தவரை பணத்தால் அபிஷேகிக்க வேண்டிய நிலையில் அல்லவா சிவா ஜியைக் கொண்டுவந்து நிறுத்திவிட்டது! சிவாஜி, கங்குபட்டருக்கும் ஏனைய ஆரிய குலத்தவருக் கும் அள்ளிக் கொடுத்த பொருட்குவியல் என்ன சாமான்யமானதா! சிறு தொகையா? பலப்பல இலட்சங்கள்! அவன் அந்த வேதிய புரியினர்க் குத் தானம் வழங்கியதுதான் என்ன ஒரு முறையா, இரு முறையா? எண்ணற்ற முறை கள்! இந்த நிலையில் பொக்கிஷம் காலியானதிலே வியப்பென்ன இருக்கிறது? அது எப்படி காலி யாகாமல் இருக்க முடியும்?

வீரன் சிவாஜியை சூத்திரப் பிறவியிலிருந்து க்ஷத்திரியப் பிறவிக்கு "ப்ரமோஷன்" செய்தனர் கங்குபட்டரும் அவர் இனத்தவரும்! அந்தப் "ப்ரமோஷனை'ப் பெறுவதற்காக சிவாஜி கொடுத்த விலை, நூறல்ல ஆயிரமல்ல இலட்சமல்ல கோடியுமல்ல, ஒரு பொக்கிஷம்! சூத்திரன் என்ற இரயில்வே ஜங்ஷனிலிருந்து க்ஷத்திரியன் என்ற இரயில்வே ஜங்ஷனுக்கு வர்ணாஸ்ரம ரயில் மூலமாகப் போக பிராமணீய ஸ்டேஷன் மாஸ்டர் வழங்கிய "பிறவி உயர்வு" டிக்கட்டின் விலை ஒரு பொக்கிஷம்! ஆம், ஒரு பொக்கிஷமே காலியாகி விட்டது சிவாஜியின் இந்த சூத்திர—க்ஷத்திரியப் பயணத்தின்போது!

ஆரியம், சிவாஜியை ஒரு க்ஷத்திரியன்தான் என்று ஒப்புக்கொள்வதற்காக, அந்த ஆரியத்திற்கு அளிக்கப்பட்ட நன்கொடை ஒரு பொக்கிஷம்! ஆனால் இந்தப் பொக்கிஷத்தைப் பெற்றுக் கொண்ட பிறகும்கூட, ஆரியம், ஏதோ பெயரளவுக்கு, ஏனோதானோ என்ற முறையில், சும்மா ஒப்புக்குத் தலையாட்டினேன் என்று நாம் கூறுவதில்லையா அந்தத் தோரணையில்தான் சிவாஜியை ஒரு க்ஷத்திரியன் என்று கூறிட சம்மதம் தந்ததே தவிர, உண்மையிலேயே, முழுமனதுடன் சிவாஜியை க்ஷத்திரியன் என்று வாய் குளிர மனம் குளிர ஒருபோதும் அழைக்கவில்லை. ஆரியத்தின் உதடு ஒப்புக்கொண்டதே தவிர உள்ளம் ஒப்பவில்லை! பேச்சிலே க்ஷத்திரியன்தான் சிவாஜி என்று கூறிவிட்டார்களே தவிர செயலிலே, அந்தச் சொல்லுக்கேற்ற சிறப்பை ஆரிய புரியினர் தந்தார்களில்லை சிவாஜிக்கு!

அவர்கள்தம் உள்ளத்திற்கும் உதட்டிற்கும் இடையே இருக்கும் இந்த 'விவாகரத்து' எப்படி

யைா தெரிந்தது உமக்கு—ஏதேனும் ஆதாரம் உண்டா, கூறமுடியுமா—அல்லது இது வெறும் கயிறு திரிப்பு வேலையா என்று சிலராவது கேட்கக்கூடும். அப்படிப்பட்ட ஐய வினாக்காரர்களின் சந்தேகக் கேள்விக்குச் சரியான விடை தருவதற்காக, கடைசியாக ஒரு முறை வரலாற்று ஆசிரியர் ஜதுநாத் சர்க்காரை அழைக்கிறோம்—அவருக்கு அடிக்கடி தரப்படும் 'தொல்லை'க்காக அவர் நம்மை மன்னிப்பாராக!

இதோ, ஜதுநாத் சர்க்கார் பேசத் தொடங்குகிறார். கேட்போமாக?

"சிவாஜிக்குப் பூணூல் அணிவித்து அவரை க்ஷத்திரியமாக்கும் சடங்கு முடிந்தவுடனே, அடுத்தாற்போல் செய்யப்பட வேண்டிய பணி, ஒரு க்ஷத்திரிய புருஷருக்குச் சாஸ்திரப்படி தெரிந்திருக்க வேண்டிய மந்திரங்களை அவருக்குக் கற்பிப்பதுதான்.

"பிராமணர்களைப் போலவே க்ஷத்திரியர்களும் புனிதமான துவிஜ குலத்தவர்களே (இரு பிறப்பாளர்களே) யாதலால் வேத மந்திரங்களை உச்சரிக்க பிராமணர்களுக்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை க்ஷத்திரியர்களுக்கும் உண்டு என்றும், தான், இப்போது ஒரு க்ஷத்திரியராக ஆக்கப்பட்டு விட்டதால் வேத மந்திரங்களை ஓதி உணரும் உரிமை தனக்கும் நிச்சயமாக உண்டு என்றும், எனவே ஒரு பரிபூரண க்ஷத்திரிய அரசரின் முடிசூட்டு விழாவின் போது என்னென்ன வேத மந்திரங்கள் அந்த அரசருக்குச் சொல்லித் தரப்பட வேண்டுமோ அவ்வளவையும் இப்போது தனக்கும் சொல்லியாகவேண்டும் என்றும், அதுதான் முறை என்

றும் சிவாஜி தெரிவிக்கலானுர். அது மிகவும் நியாயமான கோரிக்கை.

"சிவாஜி இந்த வேண்டுகோளை விடுத்தாரோ இல்லையோ, உடனே, விழாமண்டபத்தில் கூடியிருந்த பிராமணர்கள் வெகுண்டெழுந்து, தங்கள் ஆட்சேபக் குரலெழுப்பி, இந்தக் கலியுகத்தில் உண்மையான க்ஷத்திரியரோ வைசியரோ ஒருவர்கூட கிடையாது என்றும், இப்போது க்ஷத்திரியர் வைசியர் என்று சிலர் சொல்லிக் கொள்ளவதெல்லாம் வெறும் புரட்டு என்றும், இந்தக் காலத்தில் தப்பி இருக்கும் ஒரே ஒரு இரு பிறப்பாளர்கள் (வேதம் ஓதும் உரிமை படைத்தவர்கள்) பிராமணர்கள் மட்டும் தான் என்றும், எனவே சிவாஜியின் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்க முடியாதென்றும் அழுத்தந்திருத்தமாக அறிவிக்கலாயினர்.

"சிவாஜியின் கோரிக்கைக்கு பிராமணக் கூட்டத்திலிருந்து கிடைத்த இந்தப் பெரிய எதிர்ப்பைக் கண்டு, பிராமணகுரு கங்குபட்டர் கூட சிறிது அஞ்சியவராய், வேத மந்திரங்களை சிவாஜியின் முன் கூறுவதை அடியோடு நிறுத்திவிட்டு, "ஏதோ ஒரு மாதிரியான முறை"யில் தான் க்ஷத்திரியப் பரம்பரையில் சிவாஜியைப் பதிவு செய்து வைத்தார்.

"எனவே வேதமோதும் உரிமையைப் பொறுத்தவரை, அது பிராமணர்களின் தனிச் சொத்தாகவேதான் இதன் பிறகும் இருக்கலாயிற்றேதவிர, சிவாஜிக்கு அந்த உரிமை கிடைக்கவில்லை."

ஜதுநாத் சர்க்காரால் இதுபோல் கூறப்படும் இந்த நிகழ்ச்சியைப் பற்றி, ஹரப்ரசாத் சாஸ்திரி

என்னும் மற்ெறாரு சரித்திராசிரியர் குறிப்பிடும் போது.

"தங்களுடைய தனிப் பெருமையையும் காப்பாற்றிக் கொண்டு, சிவாஜியினுடைய வேண்டுகோளையும் நிறைவேற்றி வைப்பதற்காக, அநேகமாக அந்தப் பேராசை பிடித்த பிராமணர்கள் ஒரு சில வேத மந்திரங்களை மட்டும் சிவாஜியின் காதில் ஒரு சொல்கூட விழமுடியாத விதமாக மிக சாமர்த்தியமாக முணுமுணுத்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்"

என்பதாக ஒரு ருசிகரமான தகவலைத் தந்திருக்கிறார்,

மராட்டிய மண்டலத்து முப்புரிதாரிகளின் இந்த ஆணவப் போக்கு கண்டு, சிவாஜி மனம் மிக முறிந்தவரானார். ஜதுநாத் சர்க்கார் கூறுவது போல, எந்தப் பிராமணர்களின் பாதுகாப்புக்காகவும் வாழ்க்கைச் செழிப்புக்காகவும் தன்னுடைய வாழ்நாளையே சிவாஜி அர்ப்பணம் செய்தாரோ, அந்தப் பிராமணர்கள், தன்னை ஒரு க்ஷத்திரியனாக்குவதாகக் கூறி, அதற்காகத் தன பொக்கிஷமே காலியாக வேண்டிய அளவுக்குத் தன்னிடமிருந்து பொன்னும் பொருளும் தானமாகப் பெற்றுக்கொண்ட பிறகும் கூட, தன்னை ஒரு சூத்திரன் என்றே வற்புறுத்திக் கூறுவதையும், அந்தப்படியே நடத்துவதையும் கண்டபோது, சிவாஜியின் உள்ளம் அனலிடு மெழுகாயிற்று. சிவாஜிக்கு அளவற்ற ஆத்திரமும் வரலாயிற்று. ஒரு முறை, சிவாஜி, பிராமணர்கள் தனக்கு வேதமந்திரங்களைக் கற்பித்துத் தரமறுக்கிறார்கள் என்பதைக்கண்டு அவர்கள்மீது கடுங்கோபம் கொண்டு, ஆட்சியில் உத்தியோகம் வகித்

துக் கொண்டிருந்த எல்லாப் பிராமணர்களையும் வேலையை விட்டு விலக்கிவிட்டு, அவர்களுக்குப் பதிலாக பிராமணரல்லாத வகுப்பைச் சேர்ந்தவர்களும் கற்றறிந்த பெருமக்களுமாகிய காயஸ்தர்கள் என்பவர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டாராம். இது ஏன் என்று பிறர் கேட்டபோது; "அவர்களெல்லாம் மகாப் பெரியவர்கள்; முனி புங்கவர்கள்; தவ சிரேஷ்டர்கள். அவர்கள் இந்தச் சாமானியனின் கீழிருந்து அரசாங்க அலுவல் பார்ப்பது தகாது. ஆண்டவனை வழிபடும் புனிதப் பணி ஒன்றைத் தவிர வேறு எந்தப் பணியிலும் அவர்களை ஈடுபடுத்துவது மகா பாவம்" என்று கிண்டலாகப் பதில் கூறினாராம். தரிக்—ஈ—சிவாஜி என்ற பழைய வரலாற்றுச்சுவடியொன்று இந்தத் தகவலை நமக்குத் தருகிறது.

சிவாஜி தன் இறுதிக் காலத்தில் ஆரிய மாயையின் கொடுமையை எண்ணிப் பெரிதும் வருந்தியிருக்கிறான் என்பதற்கு, வரலாறு, இது ஒன்று தானா, இதுபோன்ற எத்தனையோ ஆதாரங்களைத் தரத்தான் செய்கிறது. ஆனால் ஆரியச் சிலந்தி விரித்துள்ள வஞ்சக வலையின் தன்மை இத்தகையது என்பதை சிவாஜி உணரத் தலைப்படுவதற்கு முன்னாலேயே அந்தச் சிலந்தியின் வலையிலே சிவாஜி சரியான முறையிலே சிக்கிவிட்டான். எனவே, பிறகு, அந்த மாவீரனால், இந்த வலையிலிருந்து முற்றிலும் தப்ப முடியவில்லை

ஆரியம் ஒரு பலிபீடம். அந்தப் பலிபீடத்திற்கு இரையானவர்கள், பலர், பலப்பலர், பற்பல நூற்றாண்டினர், பலவேறு திறத்தினர். அவர்களில் மிக முக்கியமானவர்களில் ஒருவரே மராட்டிய மண்டலத்து மாபெரும் தலைவன் சிவாஜி. ஆம்! அப்படித்தான் கூறுகிறது வரலாற்றுச் சுவடி!

அருந்தியவுடனே போதை தரும் பொருள் மது என்கிறார்கள். நினைத்த அளவிலேயே வெறி ஊட்டக்கூடிய 'வஸ்து' காமம் என்கிறார்கள். ஆனால் இந்த இரண்டையும்விட வேகமாகவும், அதிகமான அளவிலும், எளிதில் மீளமுடியாத வகையிலும் போதை தரக்கூடிய பொருள் வேறொன்றிருக்கிறது—அது, அவ்வளவு போதை நிறைந்தது என்பது பலருக்குத் தெரியாது; தெரிவித்தாலும் பலர் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள்—ஆனால் உண்மையில், நாம் குறிப்பிடும் அந்தப் பொருளால் விளையும்போதை, மது—காமம்—இந்த இரண்டினாலும் விளையும் போதையின் கூட்டுத் தொகையைவிட அதிகமானது! அதிகமானது மட்டுமல்ல, ஆபத்து மிகுந்ததும்கூட!

எப்படியோ, எந்தக் காரணத்தாலேயோ, வெற்றி எனும் மலை உச்சிமீது ஏறி நின்றிடும் வாய்ப்பும் வசதியும் ஏற்பட்டுவிட்டால், அத்தகு வாய்ப்பும் வசதியும் கிடைக்கப் பெற்றோருக்கு ஏற்படும் களிப்பு, அவர்களுடைய நிதான புத்தியை இழக்கச் செய்வதும், இன்னதுதான் செய்கிறோம் என்பது தெரியாமல் எதையும் செய்யத் தூண்டுவதும், எவரையும் மதிக்காமல், "எமக்கு ஈடு யாருண்டு" என்ற இறுமாந்த போக்கில் நடக்கச்செய்வதும் சகஜம். அதிலும், வெற்றி, அதிகமாகப் பாடுபடாமலோ அல்லது எதிர்பாராத திடீர் அதிசயமாகவோ ஏற்பட்டுவிடுமானால், அத்தகு நேரங்களில், வெற்றிபுரியில் உலவுவோர், ஆணவ புரியினராகவே உருமாறி விடுவதுண்டு. வெற்றிக் களிப்பு, அவ்வளவு போதை செறிந்ததோர் விசித்திரப் பொருள்!

மராட்டியர் குல மாணிக்கம்—மாபெரும் தலைவன் சிவாஜியை வர்ணாஸ்ரமம் என்னும் மந்திரக் கோல் கொண்டு மதத் துறையில் தம் தாள் பணியச் செய்த ஆரியர், பிறகு, அந்த வெற்றிக்களிப்பு பால் ஏற்பட்ட போதை காரணமாக, அரசாங்கத் துறையிலும்கூட தங்கள் ஆதிக்கக் கொடியை உயர்த்தி, அங்கேயும்கூட, சிவாஜி, தங்கள் கட்டளைக்குக் கட்டுப்பட்ட கட்டழகனே என்று கூறிடத் தக்க நிலையை உண்டுபண்ண விழைந்தனர். விழையாமலா இருப்பர்! வெற்றிக்களிப்பு என்ன சாமான்யமான பொருளா! அந்த அரும்பொருள், தன்னை உண்டு களித்த "உத்தமர்"களை, தன் மனம்போன போக்கில் ஆட்டிப் படைக்காமலா இருக்கும்!

ஆரிய வட்டாரத்தவர், ஆட்சி வட்டாரம் முழுவதையும் தங்கள் ஏகபோக சொத்தாக ஆக்கிக் கொண்டு விட்டால், பிறகு, அரசன் சிவாஜியை தங்கள் ஆணைவழி நடந்து தீரவேண்டிய நிலைமைக்கு ஆட்படுத்தி விடலாம் என்றெண்ணினர். அந்த எண்ணத்திற்கு இடையூறாக இருந்தவர்கள் "காயஸ்தர்கள்" என்னும் பெயர் படைத்த மராட்டிய வகுப்பினர். காயஸ்தர்கள்; படித்தவர்கள், புலமை மிகுந்தவர்கள்; ஆட்சி அநுபவம் தெரிந்தவர்கள்; வீரன் சிவாஜியால் மிகவும் விரும்பப் பட்டவர்கள். அந்தக் காலத்தில், மராட்டிய மண்டலத்தில், பிராமண குலத்துக்குப் போட்டியாக ஆட்சிப் பீடத்தில் வந்து நிற்கக்கூடிய தகுதியும் திறமையும் படைத்திருந்த பிராமணரல்லாத வகுப்பு அது ஒன்றுதான். எம் பாடுபட்டாவது காயஸ்தர்களை "ஒழித்து"க்கட்டி விட்டால்—அவர்களை ஆட்சி மண்டபத்தின் வாயிற்படிகளையும் அணுக வொட்டாதபடி செய்து விட்டால்—அவர்களுக்கு மராட்டிய புரியில் பட்டமும் பதவியும் கிடையாது

என்னும் நிலையை உண்டுபண்ணிவிட்டால்—பிறகு ஆரிய குலத்தவருடன் உத்தியோக மண்டலத்தில் போட்டிபோட யாருமே முன்வர மாட்டார்கள். ஆட்சி மன்றம், அந்த சாஸ்திரம்தாங்கிகளின் சொந்த சொத்தாகிவிடும்; பட்டமும் பதவியும் அவர்கள் காலடியிலே தஞ்சம் என வந்து நின்று கொஞ்சுமொழி பேசும். எனவேதான், அந்தக் கனபாடிகளின் கூட்டம், உத்தியோக மண்டலத்தில் அரும்பணி பல ஆற்றிவந்த காயஸ்தர்கள் அனைவரையும் அங்கிருந்து துரத்த பெருமுயற்சி செய்தது. காயஸ்தர்களின் தலைவன் பாலாஜி ஆவ்ஜி மீது இல்லாததும் பொல்லாததும் கூறி, மன்னன் சிவாஜிக்கு அவன் மீது சீற்றம் ஏற்படுவதற்கு என்னென்ன சூழ்ச்சி முறைகளைக் கையாள வேண்டுமோ அவ்வளவையும் கையாண்டு பார்த்து. கோள் மூட்டுதல், குறை கூறுதல், இல்லாத குற்றங்களை ஏற்றிப் பேசுதல், செய்யாத தவறுகளைச் செய்ததாகப் புனைந்துரைத்தல், நடத்தாத அமுல் முறைகளை நடத்தியதாக ஏசுதல் — அவ்வளவையும் ஒன்று விடாமல் செய்து பார்த்தது.

ஆனல் மன்னன் சிவாஜி இந்த மதோன்மத்தர்களின் சூழ்ச்சி வலையில் சிக்க மறுத்து விட்டான், இவர்களின் எண்ணம், ஏற்பாடு, திட்டம், தீதான போக்கு, சூழ்ச்சி, சூது வழிகள் யாவற்றையும் தெள்ளத் தெளிய உணர்ந்து கொண்டு விட்டான். எனவே சிவாஜி, காயஸ்தர்களின் தலைவன் பாலாஜி ஆவ்ஜிக்கே மேலும் மேலும் ஆதிக்கம் அளித்தான. பாலாஜி ஆவ்ஜி மீது, ஆரிய வட்டாரம் வீசிய குற்றச் சாட்டுகள் அவ்வளவையும் துச்சம் என வெறுத்துத் தள்ளினன்.

பீஷ்வா

மஜ்முவாதார்

வாக்கியநவிஸ்
ஷுருநவிஸ்
தாபீர்
சார்—இ—நாபாத்
சாதிர்
காஜி—உல்—குஜாத்

இவை, சிவாஜியின் காலத்திலிருந்த எட்டு மந்திரிப் பதவிகள். இந்த எட்டிலே, சார்—இ—நாபாத் அல்லது சேனாதிபதி என்னும் பதவி ஒன்றைத் தவிர ஏனைய ஏழும் ஆரிய வட்டாரத்தவரிடமே இருந்தன. இவ்வளவு முக்கியமான பதவிகளிலும் பொறுப்புகளிலும் அவர்கள் இருந்துங்கூட, அவர்களுடைய எண்ணம் ஈடேற முடியவில்லை — காயஸ்தர்கள் மீது சிவாஜிக்கு வெறுப்போ எரிச்சலோ உண்டுபண்ண அவர்களால் இயலவில்லை.

காயஸ்தர்களின் செல்வாக்கைச் சிதைப்பதற்காகவும், தங்கள் சொந்த இனத்தின் ஆதிக்கத்தை வளர்ப்பதற்காகவும், வேதியர் வட்டாரம் பலப்பல வஞ்சக வெடிகுண்டுகளைத் தயாரித்துக் கொண்டிருந்தபோது காயஸ்தர்கள் வாய் மூடி மௌனிகளாக இருக்கவில்லை. ஏதோ ஆண்டவன் விட்ட வழிப்படி ஆகட்டும்—நம் தலையெழுத்துப்போல் காரியம் நடக்கட்டும்—நம்மால் என்ன ஆகும் — அவனன்றி ஓரணுவும் அசையாது என்றெல்லாம் வீண் வேதாந்தம் பேசி வெறும் பொழுது ஓட்டவுமில்லை. ஆரிய குலத்தவரின் சூழ்ச்சிகளை அடிக்கடி மக்கள் மன்றத்திலேயும், மன்னன் முன்னிலையிலேயும் கொண்டுவந்து நிறுத்தி, அவர்களின் தீய எண்ணங்களையும் தவறான திட்டங்களையும் முளையி

லேயே கிள்ளியெறிந்து வந்தனர் "வஞ்சகச் சிலந்தி வலை விரிக்கிறது—மராட்டியர்களே! ஜாக்கிரதை" என்ற அபாய அறிவிப்புப் பலகையை மராட்டிய மாவீரர்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலேயும் பதியவைக்கும் நற்பணியை காயஸ்தர்களின் தலைவர்கள் தொடர்ச்சியாகவும் தீவிரமாகவும் புரிந்து வந்தனர். காயஸ்தர் தலைவர்களில் மிகுந்த செல்வாக்கும் செயலாற்றும் திறமையும் படைத்தவராக இருந்த பாலாஜி ஆவ்ஜி அரசியல் துறையில் ஆரியவட்டாரத்தவர், அருப்பாடுபட்டு எழுப்ப நினைத்த ஏகபோக ஆதிக்கக் கோட்டை உருவாகா வண்ணம் பார்த்துக்கொள்ளும் நற்பணியாற்றியதோடு நில்லாமல், மதத்துறையிலே அந்த மனு மாந்தாதாக்களுக்கு இருந்துவந்த செல்வாக்கைச் சிதைக்கவும், அவர்களின் மேல்ஜாதித் தத்துவத்தை முறித்துத் தள்ளும் பெருமுயற்சி புரியலானார். "பூணூல் அணியும் உரிமை பிராமணர்க்கு மட்டும்தான் உண்டு என்று சாஸ்திரங்கள் செப்புகின்றனவே? சூத்திரர்களாகிய நாங்கள் அணிந்துகொண்டால் நூல் மார்பில் நிற்காதோ? பார்க்கலாமே அதையும்தான்!" என்று கேலிச் சிரிப்புடன் கூறி, தன் மகனுக்குத் தைரியமாக ஒரு பூணூலையே மாட்டிவிட்டார் தீரர் பாலாஜி ஆவ்ஜி. பாலாஜியின் இச்செயல் புனித ஏடுகளின் கட்டளைக்கு மாறானது என்று கூறி அவ் வீரத் தலைவரை 'ஜாதிப் பிரஷ்டம்' செய்யவும், மக்கள் உள்ளத்தில் அவர்மீது 'சாஸ்திரவிரோதி' என்னும் வெறுப்புப் புயலை மூட்டிவிடவும், ஆரியம், வேக வேகமாக முன்வந்தது. ஆனல், ஆற்றல் மிக்க தலைவர் பாலாஜி ஆவ்ஜியின் அஞ்சா நெஞ்சம் என்னும் அரிய மலைக்கோட்டையை ஆரியர் தம் சூழ்ச்சி என்னும் சிற்றுளியால் தாக்கித் தகர்க்க முடியவில்லை. ஆரிய எதிர்ப்பு உணர்ச்சி இவ்வண்ணம்

வர்ணாஸ்ரம வல்லரசையே ஒரு குலுக்குக் குலுக்கும் அளவுக்குப் புயலென வளரலாயிற்று. வளரவே, வீரன் சிவாஜி, ஆட்சிப் பீடத்தில் தங்கள் ஆதிக்கக் கொடியை நிலைநாட்ட வேண்டுமென்று ஆரியவட்டாரத்தவர் எண்ணிய எண்ணத்திற்குச் சிறிதும் இடம் கொடுத்தானில்லை.

தாங்கள் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தும், காயஸ்தர்கள்மீது கொண்டுள்ள பாசத்தை, பற்றை, சிவாஜி, துளியளவும் துண்டித்துக் கொள்ளாததைக கண்டு சீற்றம் கொண்டனர் ஆரியர். என்றாலும், அதை வெளியே காட்டிக் கொள்ள முடியவில்லை. ஏனெனில், காயஸ்தர்களமீது தங்கட்குள்ள பகைமையை வெளிப்படையாக உணர்த்திவிட்டால், சிவாஜியின் சீற்றம் தங்கள் மீதே பாயத் தொடங்கிவிட்டால் என் செய்வது என்ற அச்சம் அவர்களுக்கு! எனவே, அவர்கள, தங்கள் சூழ்ச்சி பலிக்காதது கண்டு, பிறகு, பெட்டிப்பாம்பாக அடங்கிவிட்டனர். ஆனால் சில சில சமயங்களில் கூடைகளின் மூடியைத் திறந்து கொண்டு உளளிருக்கும் அரவங்கள் தலை தூக்கிப் பார்ப்பதுபோல, அவ்வப்போது ஆரியபுரியினர், நாலாறுபேர் சந்திக்க நேர்ந்திடும் சமயங்களிலெல்லாம், ஆயிரம் படித்தவர்களாக இருந்தும் என்ன, காயஸ்தர்கள் வெறும் சூத்திரர்கள்தானே, வேதம் ஓதும் உரிமை அற்றவர்கள்தானே என்று உரத்த குரலில் கேலி செய்தபடி இருந்தனர். வெறும் கேலிதான் செய்ய முடிந்தது அவர்களால்! வேறென்ன செய்யமுடியும் வேந்தனின் கோபம் தங்கள்மீது பாய்ந்தால் என் செய்வது என்ற அச்சம அவர்களுடைய உள்ளத்தில் உலவிடும்போது!

வீரன் சிவாஜி உயிருடன் இருந்தவரை, வேதியர் வட்டாரம், மராட்டிய மண்டலத்து ஆட்சிப்

பீடத்தையே தம் வீட்டுத் தாழ்வாரத்திற்கு அழைத்து வந்துவிடுவது என்ற திட்டத்தில் துளியும் வெற்றிபெற முடியவில்லை. மதத் துறையில் அவர்களுடைய செல்வாக்கை ஒப்புக் கொண்டுதீரவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானன் சிவாஜி—எனவே அங்கே அவர்கட்குத் தலை வணங்கினன். ஆனல் அரசியல்! அதிலே தன்னுடைய அதிகாரமே தலையாயது என்னும் நிலையை அவன் ஒருநாளும் விட்டுக் கொடுத்தது கிடையாது.

## 4

1680-ல் சிவாஜி மறைந்தான். அவன் மகன் சாம்பாஜி பட்டத்திற்கு வந்தான். 1680 முதல் 1689 வரையுள்ள ஒன்பது ஆண்டுகள், சாம்பாஜி சத்ரபதியாக வாழ்ந்தான், இந்த ஒன்பது ஆண்டுக் காலத்தில், ஆரியம் சிவாஜியின் காலத்தில், எதைச் சாதிக்க முயன்று தோற்று விட்டதோ, அதைச் சாதித்துக்காட்டிவிட்டது. ஆட்சிப் பீடத்தைத் தங்கள் இனத்தவரின் ஏகபோகப் பொருளாக 'ஸ்வீகாரம்' செய்துகொண்டுவிட்டது.

சாம்பாஜியை வீழ்த்துவது மிக எளிது என்பதை, ஆரியம், அவன் பட்டத்திற்கு வந்த வெகு சில நாட்களுக்குள்ளாகவே உணர்ந்துகொண்டு விட்டது. மது, மங்கை, இந்த இரண்டினிடமும் சாம்பாஜிக்கு இருந்த பாசம், மராட்டிய மண்டலத்தைக் கட்டிக் காக்கவேண்டும் என்ற எண்ணத்தின்மீது அவனுக்கிருந்த பாசத்தைவிடப் பல நூறு மடங்கு அதிகமானது. எந்தெந்த மங்கையருடன் கொஞ்சிக் குலவினல் என்னென்னவித இன்பம் கிடைக்கும் என்னும் ஆராய்ச்சியில் ஈடுபடுவதிலேயே அவனுடைய நேரம் முழுவதும் செல

வாகிவிட்டது. எனவே ஆட்சிப்பீடத்தைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட அவனுக்கு நேரம் சிறிதும் கிடைக்கவில்லை. மானென்ன மருளும் கண்கள், மதனன் வில் என வளையும் புருவம், கண்ணாடியைப் பழிக்கும் கன்னம், இன்பப் பெட்டகம் எனத்தகும் அதரம் ஆகிய இவற்றின் தாராதரங்களைப் பற்றியேதான் அவனுக்கு நினைப்பு. நேற்றைக்கு சரோஜா, இன்றைக்கு கமலம், நாளைக்கு சகுந்தலா, சாரளாதேவி அதற்கு அடுத்த நாள், தாரா மற்றொரு நாள், தேவிகா இடையே ஒருநாள் என்ற விதத்திலே அழகுத் தெய்வங்கள் ஒவ்வொன்றிற்கும் நாள் குறித்துக் கொடுப்பதிலே தான் அவனுக்கு இன்பம். புதிய புதிய மலர்களிலே புகுந்து இன்பத்தேனை மொண்டு உண்டு களிக்கும் வண்டாக இருந்தான் அவன். எனவே அவனுக்கு நாடு—நாட்டில் வாழும் மக்கள்—அந்த மக்களை ஆளும் ஆட்சி—அந்த ஆட்சிப் பீடத்தில் அமரும் பிரதானிகள் — அந்தப் பிரதானிகள் பிறந்த குலம்—ஒரு சிறு கூட்டம் செய்யும் சூழ்ச்சி ஆகிய இவற்றைப்பற்றி யெல்லாம் சிந்தனை எழவே மார்க்கமில்லை. சாம்பாஜியின் தன்மை இதுவாக இருக்கும்போது, ஆரியம், இவனுடைய ஆட்சிக் காலத்தில், ஆட்சி மண்டலத்தையே தனதாக ஆக்கிக்கொண்டதில் வியப்பேது!

கவி கலாஷ், சாம்பாஜியின் பிரதம அமைச்சர்; ஆரிய குலத்தோன்றல்; வேத சாஸ்திரங்களில் விற்பன்னர்; சகல கலா சாஸ்திரி. இவர் அறியாத மந்திரங்களும் தந்திரங்களும் கிடையாதாம்—கவி பாடுவதில், இவருக்கு ஈடு இணை கூற முடியாதாம். அறிவு, ஆற்றல், ஆராய்ச்சி, அனுபவம் ஆகிய திறமைகள் யாவும் கைவரப்பெற்றவராம் இவர்! இவ்வளவு சிறப்பும் சீலமும் வாய்ந்த இவர், அடிக்கடி மன்னனைத் தனியாகச் சந்தித்து, "மன்னு;

நீயோ பாராளும் வேந்தன். உன்னை மன்னன் என்றழைத்து மகிழ்ச்சியும் பெருமிதமும் அடையும் மக்களோ ஆயிரமாயிரம். மராட்டிய மண்டலத்தின் புகழோ உன்னால்தான் நிலைநாட்டப்பட வேண்டும். தீரன் சிவாஜியின் புத்திரன் சிவாஜியையும் மிஞ்சிய மாவீரனாகத் திகழ்ந்தான் என்னும் பொன்மொழியோ வரலாற்றில் ஏறவேண்டும். உன்னுடைய வீரத்தால், தீரத்தால், ஆற்றலால், அறிவுரையால் மராட்டிய மக்கள் வாழ்க்கையிலே இன்பம் எக்களிக்கவேண்டும். உன்னைத்தான், உன் வீரமிகு செயல்களைத்தான், உன்னால் பெற இருக்கும் வாழ்வைத்தான், நீ தேடித் தரக்கூடிய புகழைத்தான் நாடே எதிர்பார்த்து நிற்கிறது. இந் நிலையில், மன்னா, நீ இப்படி மதுவும் மங்கையுமே கதி என்றிருக்கிறாயே, தகுமா?" என்று அறிவுரை கூறி, அரசனை நல்வழிப் படுத்தியிருப்பார் என்றுதானே எதிர்பார்க்கிறீர்கள்? தான் கற்ற சாஸ்திரங்களையெல்லாம் சத்ரபதியின்முன் விரித்துக்காட்டி, மன்னனின் தவறு எவ்வளவு பெரிது என்பதை அவனுக்குக் கசடற உணர்த்தியிருப்பார் என்றுதானே எண்ணுகிறீர்கள்? மன்னன் தகா வழிச் செல்பவனாக இருந்தாலும், மந்திரி, சகலகலா பண்டிதராக இருப்பதால், மன்னனின் தவறுகளை மட்டுப்படுத்தி நாட்டை நலம் பெறச் செய்திருப்பார் என்றுதானே கருதுகிறீர்கள்? நீங்கள் மட்டுமா, யாருமே அப்படித்தான் கருதுவர். உண்மையிலேயே ஒரு நல்லமைச்சர் நடந்துகொண்டிருக்கவேண்டிய வழியும் முறையும் அதுதான். ஆனால் கலை பல கற்ற கவி கலாஷா என்ன செய்தார் தெரியுமோ? கூறினால் நீங்கள் நம்பமாட்டீர்கள், சீச்சீ—இப்படியெல்லாம் இருக்காது—இதெல்லாம் இந்த நூலாசிரியரின் சொந்தக் கற்பனை என்று கேலி பேசுவீர்கள். எனவே

ஆர். சத்தியநாத அய்யர் எம். ஏ. எல். டி. என்னும் சரித்திர ஆசிரியரையே பேச வைக்கிறோம், கேளுங்கள்:

"கவி கலாஷா, மராட்டிய சாம்ராஜ்யத்தின் நன்மைகளை முற்றிலும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, மிகுந்த அழகும் காம வேட்கையை எழுப்பும் திறமும் படைத்த மங்கையரை, முடிவு என்பதே இல்லாமல், வரிசை வரிசையாக, மன்னனிடம் அனுப்பியபடி இருந்தான்."

மதியூக மந்திரி மன்னன் சாம்பாஜிக்குச் செய்த திருப்பணி இது! மன்னனுக்கு ஏற்ற அமைச்சர்! அமைச்சருக்கேற்ற மன்னன்!!

மன்னனின் மதியை இவ்வண்ணம் மழுங்கச் செய்ததோடு நின்றாரா கவி கலாஷா? மக்களுக்கும் மன்னனுக்குமிடையே பெரும் பேதத்தையும் உண்டுபண்ணினாராம்; மராட்டிய சாம்ராஜ்யத்திற்கே பேராபத்தைத் தேடித் தந்தாராம். கூறுகிறார் ஆசிரியர் சத்தியநாதய்யர்! அவர் தீட்டிய இந்திய வரலாறு—ஒரு கல்லூரிப் பாட புத்தகம் என்ற நூல், இரண்டாவது வால்யூம், பக்கம் 575-76-ல் காணப்படுகின்றன இச் சேதிகள்!

மன்னனும் மந்திரியும் இந்த நிலையில் இருக்கும்போது, ஆரியம் இதுதான் தக்க சமயமென்று மடமடவென்று ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றலாயிற்று. மன்னன் சாம்பாஜியின் காலத்தில் மராட்டிய மண்டலத்தில், ஆரியம் இட்டதுதான் சட்டம், வைத்ததுதான் கட்டளை என்னும் நிலை ஏற்பட்டுவிட்டது.

## 5

சாம்பாஜிக்குப் பிறகு அவன் மகன் சாகு பட்டத்திற்கு வந்தான்.

ஆனால் அதே நேரத்தில், சாகுவின் சிற்றன்னை தாராபாய் தன் மகனை மராட்டிய மண்டலத்து அரியாசனத்தில் அமரவைக்க வேண்டுமென்றும், மன்னன் சாகுவை அந்த இடத்திலிருந்து கீழே இறக்க வேண்டும் என்றும் ஆசைப்பட்டு, சாகுவின் மீது போர்தொடுக்கலானாள். சிவாஜியின் குடும்பம் இதுபோல இரண்டு பகுதிகளாகப் பிளவு பட்டுப் பிணக்குண்டு ஒன்றை ஒன்று ஒழித்துக் கட்ட வேண்டுமென்று சூள் உரைத்து நின்ற சமயத்தில் மராட்டியத் தலைவர்களும் தளபதிகளும் இந்தப் பிணக்கை அமைதியான முறையில் தீர்த்து வைக்க முனைந்தனரில்லை. மாறாக அவர்களில் சிலர் தாராபாய் பக்கமும் சிலர் சாகுவின் பக்கமும் நின்று கொண்டு அவர்களும் ஒருவரை ஒருவர் ஜென்மப் பகைவராகக் கருதி வெறுக்கலாயினர். மராட்டிய மண்டலத்திலே மாப்புகழுடன் அரசோச்சி வந்த ஒற்றுமை உணர்ச்சி மறைந்து, பேதமும் பிளவும் பகைமையும் பொச்சரிப்புமே அதுபோது எங்கும் நின்று நிலவத் தொடங்கின மராட்டியம் இரு கூறுகிவிட்டது. வீரன் சிவாஜியின் வழிவந்த தீரர்கள் அந்த அஞ்சா நெஞ்சனை மறந்து, தங்கள் மண்டலத்தை வஞ்சகத்தால் வென்றாள எண்ணும் ஆரியச் சிலந்தியையும் மறந்து, அந்தச் சிலந்தி விரிக்கும் வலை வேகவேகமாக மராட்டியம் முழுவதையும் கௌவிக்கொண்டிருக்கிறது என்னும் வேதனை நிரம்பிய உண்மையையும் மறந்து, தங்களுக்குள்ளேயே உட்பூசலையும் பகையையும் போரையும் வளர்த்துக் கொண்டனர். இரு சாராரும் ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்த விரைந்து முன்னேறும் இரு கூர்வாளாகக் காட்சி தரலாயினர்.

சிவாஜியின் குடும்பத்திலே பிளவும், மராட்டியத் தளபதிகளின் உள்ளத்திலே பூசலும், காயங்

தர்கள் கோட்டத்திலே குத்தும் வெட்டும், மராட்டிய மாவீரர்களின் அணிவகுப்பிலே பேதமும் மூண்டு, மராட்டியம் சின்னாபின்னமாகச் சிதறுண்டு கிடந்த இந்த நேரத்தை, ஆரியம், தன்னுடைய நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்கான மிகச்சிறந்த சமயமாக எண்ணிற்று. எண்ணி, சூழ்ச்சித் திட்டம் பல தீட்டத் தொடங்கிற்று. தொடங்கி, வெற்றி மாளிகையில் வீர உலா வரும் நிலைமைக்குத் தன்னைத் தானே உயர்த்திக் கொண்டுவிட்டது. ஆம்! ஆரிய சூழ்ச்சி வென்றது. மராட்டிய சாம்ராஜ்யம் சாய்ந்தது. வேதியர் கரத்துக்கு ஆட்சி மாறிற்று.

பாலாஜி விஸ்வநாத் என்னும் வேதியர் தலைவன் மராட்டியத்து மாவீரர்களிடையே ஏற்பட்ட பிளவை ஆரியம் வெற்றிபுரி நோக்கி வீரநடை போடுவதற்கான நுழைவு வாயிலாக மிகத் தந்திரமாக மாற்றி அமைத்துக் கொண்டான். முதலில் தாராபாய் கட்சியில் இருப்பவன்போல் நடித்து, அந்தக் கட்சியின் பிரமுகர்கள் பலரைத் தன் வயமாக்கிக் கொண்டு பிறகு திடீரென்று சாகுவின் கூடாரத்திற்கு மாறினான். சாகுவுக்கு வெற்றியைத் தேடித் தந்தான். அந்த வெற்றியின் மூலமாகத் தன் இனத்தவரின் கரத்திற்கு, ஆட்சி மாறுவதற்குத் தேவையான புதிய பாதையையும் வகுத்துக் கொண்டான்.

நாட்டின் பீஷ்வாவாக அதாவது முதல் அமைச்சராக ஆக்கப்பட்டான் வேதியன் பாலாஜி. அவன் முதலமைச்சராக ஆனதும் உள் நாட்டு ஆட்சி—வெளி நாட்டு உறவு—சேனைத் தலைமை—போர் தொடுக்கும் அதிகாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனக்கே செல்வாக்கை வளர்த்துக் கொண்டான். ஆட்சி மண்டலத்தின் சூத்திரக் கயிறு

அவன் ஆட்டுவித்தபடியெல்லாம் ஆடும் நிலைமைக்கு உள்ளாகிவிட்டது.

இதுவரையில், மராட்டிய மன்னன் யாரை விரும்புகிருனே அவரை பீஷ்வாவாக நியமித்து வந்தான். பீஷ்வாவின் மகனே பீஷ்வாவாக ஆக வேண்டும் என்ற பரம்பரை உரிமை இல்லாமலிருந்தது. ஆனல், வேதியன் பாலாஜி பீஷ்வாவாக ஆனதும், தனக்குப்பிறகு தன்மகன், அவனுக்குப்பிறகு அவன் மகன் என்னும் முறையிலேயே பீஷ்வா பதவி தரப்பட வேண்டும் என்னும் புது விதியை ஏற்படுத்தினுன். மன்னன் சாகுவிடமிருந்து எப்படியோ இதற்கான ஒப்புதலையும் பெற்று விட்டான். இந்த ஏற்பாட்டின் மூலம், பாலாஜி, தன் குலத்தவர்க்கு ஆட்சிப் பீடத்தில் என்றும மாருததும் பலம் மிக்கதுமாகிய இடம் ஒன்றைத் தேடிக் கொடுத்து விட்டான். அதே நேரத்தில் சிவாஜியின் பரம்பரைக்கு இருந்த ஆட்சி உரிமையை வெகுவாகக் குறைத்து விட்டான்.

வேதியன் பாலாஜி, அவனுக்குப் பின்னர் அவன் மகன் பாஜி ராவ், பாஜிராவுககுப் பிறகு பாஜிராவ் மகன் பாலாஜி பாஜிராவ் என்னும் முறையில் ஆரிய இனத்தவரே — அதுவும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே ஒருவர் பின் ஒருவராக மன்னன் சாகுவின் காலத்தில் பீஷ்வா பதவியில் தொடர்ந்து இருககலாயினர். ஆரிய இனத்தவர்க்கு அளிக்கப்பட்ட இந்தப் பரம்பரை—பீஷ்வா உரிமையை ரகுஜி பன்ஸ்லே போன்ற மராட்டியத் தலைவர்கள் எதிர்த்துப் போராடினர் என்ற போதிலும், மன்னனின் முழு ஆதரவும பீஷ்வாக்கள் பக்கமே இருந்த காரணத்தால் அவர்களின் எதிர்ப்பு எடுபடவில்லை. பீஷ்வாக்களின் ஆரிய ஆதிக்கத் திட்டமே

முழு வெற்றி பெற்றது. உண்மையிலேயே, மன்னன் சாகுவின் காலத்தில் ஆரியர் ஆதிக்கம் பரிபூரணமானதாகி விட்டது. பெயரளவுக்குத்தான் சாகு, மன்னனாக இருந்தானே தவிர, ஆட்சிக் கயிறு முழுவதும் பீஷ்வாக்களாக இருந்த பிரம்ம குலத் தலைவர்களிடந்தான் இருந்தது. பீஷ்வாக்களின் விருப்பத்திற்கு மாறாக, சாகு, ஏதும் செய்யமுடியாத நிலையும், எல்லா அதிகாரங்களும் பீஷ்வாக்களின் கைகளிலேயே குவியும் நிலையும் ஏற்பட்டுவிட்டன. சாகு, மரணம் அடையும் தறுவாயில், அவனுக்கு மகன் யாரும் இல்லாத காரணத்தால், அப்போது பீஷ்வாவாக இருந்த பாலாஜி பாஜி ராவ் என்னும் வேதியரே, தனக்குப் பின்னால் தன் சாம்ராஜ்யத்தை ஆண்டுவரவேண்டுமென்றும், அந்த வேதியருக்குப் பின்னால் அவருடைய சந்ததியினரிடமே ஆட்சி செல்லவேண்டுமென்றும், தன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பெயரளவுக்குத்தான் அரசர்களாக இருப்பார்களென்றும், அவர்கள் பீஷ்வாக்களின் அதிகாரத்தில் எந்த வகையிலும் குறுக்கிட மாட்டார்கள் என்றும் தெளிவாகக் குறிப்பிட்டு இரண்டு மரண சாசனங்களை எழுதி வைத்துவிட்டு மாண்டு போனான்.

மன்னன் சாகுவிற்குப் பின்னர் பெயரளவில் அரசராக இருப்பதற்குக் கூட அவன் குடும்பத்தில் ஆண்மகன் யாரும் இல்லாமற் போன காரணத்தால், சிவாஜி கண்ட மராட்டிய சாம்ராஜ்யம் பீஷ்வாக்கள் என்னும் பிரம்மகுலத்தவரின் ஏகபோக உரிமையாகவே ஆகிவிட்டது.

சிவாஜி மறைந்த ஆண்டு 1680 பீஷ்வா பாலாஜி பாஜிராவ் கரத்திற்கு, ஆட்சி, மாறிய நாள் 1749. இவ்வண்ணம், கிட்டத்தட்ட எழுபதே ஆண்டுக் காலத்தில், சிவாஜி அரும்பாடுபட்டு நிறுவிய மராட்டிய சாம்ராஜ்யம் ஆரியம் என்னும் பலிபீடத்திற்கு இரையாக்கப் பட்டுவிட்டது.

நாளடைவில் அந்த ஆட்சிப்பீடம் சிறுகச் சிறுகச் சிதைந்து கொண்டே வந்து, 1818-ல் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்ட காரணத்தால் முற்றிலும் மறைந்தே போய் விட்டது.

சிவாஜி மதத் துறையிலேமட்டும் ஆரியத்துக்கு அடிபணிய நேரிட்டது. அதுவும் வேண்டா வெறுப்புடன்! வேறு வழி இல்லாத காரணத்தால்! ஆனல் அவன் மகன் சாம்பாஜியும், பேரன் சாகுவுமோ தங்கள் திறமையின்மை காரணமாக ஆட்சிமண்டலத்தையே ஆரிய இனத்திற்குத் தானமாக அளித்து அரசியல் துறையிலேயும் ஆரியத்திற்கு அடிபணியும் நிலைக்கு ஆளாகி விட்டனர்.

ஆம்! மராட்டியர் வரலாறு ஒரு சோக சித்திரம். ஆரியம் என்னும் பலிபீடத்தின் முன்னல் ஒரு பெரிய சாம்ராஜ்யமே பலியாக்கப் பட்டதை எடுத்துக் காட்டும் உயிரோவியம் அந்த சரிந்த சாம்ராஜ்யத்தின் வரலாற்று நிகழ்ச்சியைத்தான் அழகிய முறையில் ஒரு நாடக ஓவியமாகத் தீட்டியிருக்கிறார் அண்ணு அவர்கள். அந்த நாடகத்தைப் பார்க்கும் போதுதான், தேசீயத் தோழர்கட்கு, நாடகத்திலே சித்திரிக்கப் பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் கற்பனை சம்பவங்கள் அல்ல, வரலாற்று உண்மைகள் என்பதை நம்ப முடியவில்லை.

எப்படி நம்பமுடியும் அவர்களால்' பாவம், வரலாற்றைப் படித்துணர்வதற்கு அவர்கட்கு ஓய்விருந்தால் தானே! அவர்களிலே பெரியவர்கள், ஆளவந்தார்களாக இருக்கிறார்கள். அவர்கட்கு அடக்குமுறைப் பாடம் படிப்பதற்கே நேரம்போதவில்லை! மற்றவர்களோ, அந்தப் 'பெரியவர்கள்' எய்யும் அடக்குமுறை அம்புகளைக் கண்டு சீற்றம் கொண்டெழும் பொதுமக்களைச் சாந்தப்படுத்தித் தீரவேண்டிய தீராத தொல்லைக்கு ஆளானவர்களாக இருக்கிறார்கள்—அவர்கட்கிருக்கும் நேரமோ, அந்த வேலைக்கே சரியாக இருக்கிறது. இந்த நிலையிலே, அந்த இரு சாராரிலே, எந்த சாராருக்குத் தான் வரலாற்றுச் சுவடியைப் புரட்டிப் பார்க்கும் அளவுக்கு ஓய்வு கிடைக்க முடியும்! கிடைக்காதுதான், உண்மையிலேயே கிடைக்காதுதான்!!